PUBLIC LIBRARY

ISSN 1391-9504

Vijey විජය
# விஜய்
23.10.2013 - மலர் 10, இதழ் 34



## உயிரியல் வகைப்பாடு



## உலகின் உயரமான தீவுகள்

## GIT பாடநெறி

## நீல் ஆம்ஸ்ட்ரோங்; வாழ்க்கைக் குறிப்புக்கள்





## நீங்களும் 'மெஜிக்' செய்யலாம்!

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளர்ச்சியின் முடிவு

டொய்லி கண்டி ராச்சியத்தில் நிகழும் சகல விடயங்கள் குறித்தும் மிக உன்னிப்பாக அவதானித்தவண்ணம் இருந்தார். இந்த தீர்மானத்தை எடுத்ததற்குக் காரணம் மொல்லிகொட செயற்பட ஆயத்தமாக இருக்கும் சூழ்நிலையின் அடிப்படையிலேயே என்பதனையும் அவர் அறிந்திருந்தார். இதுகுறித்து ஆள்பதிக்கும் அறிவிக்கப்பட்டது. மொல்லிகொடையின் ஆதரவாளர்கள் மன்னனுக்கு சார்பாக இருந்தால் கிளர்ச்சிக்காரர்களை இலகுவாக விரட்டி அடிக்கலாம் என்றும் அவர்கள் மன்னனுக்கு எதிராக கிளர்ச்சிக்காரர்களுடன் இணைந்துகொண்டால் பிரித்தானியரின் உதவி இல்லாமல் வெற்றி பெறுவது சந்தேகத்திற்குரியதே என்றும் அறிவிக்கப்பட்டது.

இதனால், கிளர்ச்சிக்காரர்களுக்கு எதிராக சேனையொன்றைத் திரட்டிக் கொண்டு குவன்வெல்லையில் முகாமிட்டிருந்த கிளர்ச்சியாளர்களின் இடத்திற்குள் மொல்லிகொட பிரவேசித்தான். இதற்கிடையில், எஹலப்பொலையின் குழுவினர் ஆங்கிலேயரின் உதவியை தொடர்ச்சியாக நாடியவண்ணம் இருந்தனர். அவர்களுக்கு அவ்வாறு உதவி செய்தால் அவர்களின் மதம் மற்றும் கௌரவத்தை மட்டும் பாதுகாத்துக் கொண்டு நாட்டைக் காட்டிக்கொடுக்கத் தயார் என விளக்கமளித்து அவர்கள் செய்திகளை அனுப்பினர்.

இதேவேளை, மொல்லிகொடையின் சேனைகள் திடீரென ஆங்கிலேயரின் எல்லைப் பிரதேசத்திற்கு வந்தன. அதனால், ஆங்கிலப் படைகளும் அதே திசையை நோக்கி அனுப்பப்பட்டன. இவ்விரு சேனைகளும் யுத்தம் செய்ய ஆயத்தமான சந்தர்ப்பத்தில் ஜோன் டொய்லி எல்லைப் பிரதேசத்திற்கு வந்தடைந்து யுத்தத்தை நிறுத்தினார். இதற்கிடையில், ஆங்கிலேயரின் உதவி கிடைக்காததால் கிளர்ச்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படாமல் முடிவுற்றது. இதேவேளை, எஹலப்பொலையின் படையினர் தமது உயிர்களைப் பாதுகாப்பதற்காக தத்தமது இருப்பிடங்களை நோக்கி ஓடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk

## புலமைப்பரிசில் சித்தியடைந்தோர் புகைப்படம்

### 70 புள்ளிகளுக்கு மேல் அனைவரும் அனுப்பலாம்

2013 தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் புகைப்படங்களை 'விஜய்' பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு நாம் தயாராக உள்ளோம். பிள்ளைகளின் மன உணர்வுகளை நன்றாக உணர்ந்துள்ள 'விஜய்', மேற்படி பரீட்சையில் மொத்தமாக 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற அனைவரையுமே சித்தியடைந்தவர்களாகவே கருதுகின்றது. எனவே, 70 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் தமது புகைப்படத்துடன் தாம் பெற்ற புள்ளிகளைக் குறிப்பிட்டு, கீழ்காணும் கூப்பனை நிரப்பி, புள்ளிகளைக் காட்டும் அத்தாட்சியையும் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*(குறிப்பு: குழுப்படம் அனுப்புபவர்கள் தனிப்படம் மற்றும் விபரங்கள் அனுப்புவதைத் தவிர்க்கவும்)*

**கூப்பன்**

பெயர்: ..............................
புள்ளிகள்: ..............................
பாடசாலை: ..............................
வீட்டு முகவரி : ..............................
பெற்றோர் பெயர்கள்: ..............................
தொலைபேசி இல: ..............................

மேற்படி விபரங்கள் உண்மையானவை என்பதை உறுதிப் படுத்துவதுடன், அத்தாட்சியையும் இணைத்துள்ளேன்.

..............................
அதிபர் கையொப்பமும்
அத்தாட்சி முத்திரையும்

அனுப்ப வேண்டிய முகவரி:

புலமைப்பரிசில்
சித்தியடைந்தோர்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.

# 5,500 ஆண்டுகளாக வெளிப்படாத மர்மம்

## புதிய தொழில்நுட்பத்தினால் தெரியவந்தது...

பிரித்தானிய அருங்காட்சியகத்தில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாகக் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பண்டைய கால எகிப்திய மம்மி ஒன்று தொடர்பான மர்மம் புதிய ஆய்வுகளினூடாக வெளிப்பட்டுள்ளது. இந்த மம்மி ஓர் இளைஞனுடையதாகும். ஆக, இந்த இளைஞன் எப்படி இறந்தான்? என்பதனையே புதிய தொழில்நுட்பத்தினூடாக ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அதன்படி, இந்த மரணத்திற்கு காரணம், அந்த இளைஞன் கத்தியால் குத்தப்பட்டுள்ளமையாகும் எனத் தெரியவந்துள்ளது. இந்த அருங்காட்சியகத்திற்குச் செல்பவர்கள் அங்குள்ள கணினி திரையைத் தொடுவதனூடாக, இது தொடர்பான விபரங்களை அறிந்துகொள்ள முடியும்.

இந்த மம்மிக்கு உரித்தான எகிப்திய இளைஞனை 'கெபெலீன் மனிதன்' என்றே அடையாளப்படுத்துகின்றனர். எனினும், இந்த மம்மியின் செந்நிறக் கேசம் காரணமாக, அருங்காட்சியகத்தைச் சேர்ந்தவர்கள் இதற்கு 'ஜின்ஜர்' என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். இதன் இடதுபுற பின்தோள் பகுதியிலேயே கத்திக் குத்தின் ஆழமான அடையாளத்தைக் காண முடிகிறது. சிறப்பு ஸ்கேன் பரிசோதனைகளுக்கு உட்படுத்தியே, இந்த மர்மம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதனை முப்பரிமாண உடற்கூறுப் பரிசோதனைகளுக்கும் ஆய்வாளர்கள் உட்படுத்தியுள்ளனர்.

இந்த சிறப்பு ஆய்வினை நீதிமன்ற மருத்துவ விஞ்ஞானிகள் எனப்படும் குற்றவியல் மருத்துவ விஞ்ஞானிகளே மேற்கொண்டனர். சுமார் 5,500 ஆண்டுகளுக்கு முன்னர் திட்டமிட்டு கத்தியால் குத்தப்பட்டு இந்த நபர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று இந்த சிறப்பு மருத்துவ விஞ்ஞானக் குழுவினர் ஆய்வுகளினூடாகக் கண்டுபிடித்துள்ளனர். இந்த கத்திக் குத்தினால் அந்த இளைஞனின் தோள் உட்புற எலும்புப் பகுதிக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மனித எச்சங்கள் தொடர்பான விசேட நிபுணர் கலாநிதி டெனியல் அன்டொயின் இங்கிலாந்தின் டைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியின்போது தெரிவித்துள்ளார்.

"படு மோசமான தாக்குதலாக இதனைக் குறிப்பிட முடியும். இதனால், அவரது நுரையீரலுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது" என்று கலாநிதி டெனியல் குறிப்பிடுகின்றார்.

இந்த இளைஞன் 18 முதல் 20 வயதுக்குட்பட்ட நன்கு வளர்ச்சிபெற்ற பலமான நபர் என்றும் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அத்துடன், எதிராளியுடன் போராடியதற்கான அடையாளம் எதுவும் இந்த இளைஞனின் உடலில் இல்லாததனால், திடீரென மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினாலேயே இந்த இளைஞன் இறந்திருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது. தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்பட்ட ஆயுதம் 0.7 அங்குலம் அகலமும் 5 அங்குலம் நீளமும் கொண்ட பித்தளையினால் செய்யப்பட்ட கூர்மையான ஆயுதம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

(17 ஆம் பக்கம் பார்க்க)



பிரித்தானிய அருங்காட்சியகத்திலுள்ள கணினித்திரையைத் தொடுவதனூடாக, இந்த மம்மியின் ஸ்கேன் படமாதிரிகளையும் விபரங்களையும் பார்வையாளர்கள் அறிந்துகொள்ளலாம்.



பிரித்தானிய அருங்காட்சியகத்தில் கெபெலீன் மனிதனின் மம்மி வைக்கப்பட்டிருந்த விதம்.



மம்மியின் இடது தோள்பகுதியில் கத்திக்குத்தினால் ஏற்பட்ட காயத்தின் அடையாளத்தினைக் காண முடியும்.

© British Museum

International Language Centre
வழங்கும்
இலவச தபால் மூல
ஆங்கில பாடநெறி.
சர்வதேச பாஷை மத்திய நிலையம் அகில இலங்கை ரீதியில் தமிழ் பேசும் மாணவர்களுக்கு வீட்டிலிருந்தே சரளமாக எழுத, பேச, வாசிக்க கூடிய ஆங்கில டிப்ளோமா பாடநெறி ஒன்றை அறிமுகம் செய்கிறது.
காலம் — 45 நாட்கள். வயது எல்லை இல்லை.
இலங்கையின் எப் பாகத்தில் இருந்தும் கற்கலாம்.
பாடசாலை மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.
பாடநெறி முடிவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும்.
பாடநெறி பதிவு கட்டணம் ரூ.990/- மட்டும் அறவிடப்படும்.

பெயர்களை பதிவு செய்ய பின்வருமாறு SMS ஒன்றை அனுப்பவும்
MN இடைவெளி உங்கள் பெயர் , முகவரி ,வயது
SMS - செய்யுங்கள். 0777- 280 834
INTERNATIONAL LANGUAGE CENTRE
P. O.Box.119, # 317/a D.S.Senanayake st, Kandy.
Please Call: 0814-929193, 0774-348434

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலை



கோணப்பட்டி பாடசாலையில் ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் மாணவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தார்கள். வகுப்பாசிரியர் சரவணனின் இனிமையான அறிவிப்பே அதற்குக் காரணமாக இருந்தது.

"மாணவர்களே... வருகிற சனிக்கிழமை காலை நாம் அருகில் உள்ள பசுங்கோட்டைக்கு கல்விச் சுற்றுலா செல்கின்றோம். அங்கு பாழடைந்த கோட்டை, அழகான ஆறு, கண்கவரும் சிலைகள், வண்ணமயமான பறவைகள் எல்லாம் உள்ளன. இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு மாலையில் வீடு திரும்பி விடுகின்றோம். அது மட்டுமல்ல; சுற்றுலா முடிவில் நான் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன். யாருடைய பதில் மிகச் சரியாக இருக்கிறதோ, அந்த மாணவனுக்கு ஒரு விலையுயர்ந்த பேனாவை பரிசாகத் தரப்போகிறேன்" என்றார். மாணவர்கள் உற்சாக மிகுதியில் கைதட்டினார்கள்.

சனிக்கிழமை காலை, வண்ணமயமான உடைகளை அணிந்துகொண்டு மாணவர்கள் பேருந்தில் ஏறினார்கள். ஒரு மணித்தியால நேர பயணம். பசுங் கோட்டை வந்துவிட்டது. அரசர்கள் ஆண்ட அந்தப் பெரிய கோட்டை தற்பொழுது சற்றுப் பழுதடைந்திருந்தது. கோட்டையைச் சுற்றி அழகான ஆறு ஒன்று ஓடிக்கொண்டிருந்தது. கோட்டைக்குள் பல அழகான சிலைகள் செதுக்கப்பட்டிருந்தன. சில சிலைகள் பழுதுபடாமல் அழகாக இருந்தன. சில சிலைகள் மட்டும் கை ஒடிந்து, கால் ஒடிந்து காணப்பட்டன. மாணவர்கள் உற்சாகமாகக் கோட்டையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருந்த அந்த அழகான கண்ணன் சிலை அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டது. நேரம் ஓட ஆரம்பித்தது.

மாலையானதும், "மாணவர்களே... இப்பொழுது நாம் சுற்றுலாவின் நிறைவுப் பகுதியில் இருக்கிறோம். இதோ நான் கேட்கப் போகின்ற கேள்வியைக் கவனமாக் கேளுங்கள்.... "ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ள அந்தக் கண்ணன் சிலையிலிருந்து நாம் என்ன தெரிந்துகொண்டோம்?" ஆசிரியர் சரவணன் கேட்டார். இந்தக் கேள்விக்கு ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பதிலைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

கடைசியாக... வகுப்பிலேயே மிக நன்றாகப் படிக்கும் மாதவன் தனது பதிலைச் சொல்ல ஆரம்பித்தான். "ஒரு சிலை என்பது கல்லிலிருந்து தேவையானதை செதுக்குவது மட்டுமல்ல; தேவையில்லாததை நீக்குவதும் தான். சிற்பி தேவையானதை வைத்துக்கொண்டு தேவையில்லாததை நீக்கிவிட்டிருக்கிறார். இதனால், எமக்கு ஓர் அழகான சிலை கிடைத்திருக்கிறது. இதுபோலவே நாமும் எம்முடைய வாழ்க்கையில் நல்ல மனம், கடின உழைப்பு, புத்திசாலித்தனம் போன்றவற்றை வைத்துக்கொண்டு சோம்பேறித்தனம், கோபம், பொறாமை போன்ற தீய எண்ணங்களை நீக்கிவிட்டால், எமக்கு அருமையான வாழ்க்கை கிடைக்கும்" என்றான்.

"ஆம் நீ சொன்னதுதான் சரியான பதில், இதோ, இந்தப் பேனையைப் பரிசாக வைத்துக்கொள்!" என்று ஆசிரியர் கூற, அனைத்து மாணவர்களும் மகிழ்ச்சியோடு கைதட்டினார்கள்.

# மரங்களை வெட்டாதீர்கள்!

பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தான் முத்து. வந்ததிலிருந்து ஓர் ஓரமாக அமர்ந்து, ஏதோ சிந்தித்துக்கொண்டிருந்தான். அவனது முகம் சோகமாகக் காணப்பட்டது.

இதைக் கவனித்த அவனுடைய அம்மா, அவனருகில் வந்து, "ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்?" என்று கேட்டார்.

"இன்றைக்குப் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வரும்போது, வழியெல்லாம் இருந்த மரங்கள் அனைத்தையும் வெட்டிப் போட்டிருக்கின்றார்கள். நேற்று இருந்த மரங்கள் இன்று இல்லை. இவ்வாறு மரங்களையெல்லாம் வெட்டிப்போட்டால், எம்மால் எப்படிம்மா வாழ முடியும்?" என்றான் முத்து.



இதைக் கேட்டவுடன் அவனது அம்மா "உன் கவலை எனக்குப் புரிகிறது. இதற்குக் காரணம் உன் அப்பாதான். அவர்தான் வீதியில் இருக்கும் மரங்களையெல்லாம் வெட்டி, அவருடைய தொழிலுக்குப் பயன்படுத்துகிறார். முதலில் நீ அவரிடம் சொல்" என்று கூறிவிட்டு உள்ளே போனார் அம்மா.

அப்போது அவனுடைய அப்பா வீட்டுக்குள் நுழைந்தார். அப்பாவுக்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்த முத்து, மேஜை மீதிருந்த மாம்பழத்தை எடுத்து சாப்பிட்டான். சாப்பிட்டு முடித்த பின்னர் மாம்பழத்தின் கொட்டையையும் உண்ண முயன்றான். இதைக் கவனித்த அவனுடைய அப்பா, அவன் கையைப் பிடித்துத் தடுத்தார்.

"என்னடா, மாம்பழக்கொட்டையை உண்ணப் போகிறாயா? வயிற்றில் மரம் வளரும்" என்று கூறினார்.

அப்பா கூறியதைக் கேட்ட முத்து "அப்பா, வீதியிலுள்ள மரங்களையெல்லாம் வெட்டுகிறீர்கள்... என் வயிற்றிலாவது ஒரு மரம் வளரட்டுமே!" என்றான்.

இதைக் கேட்டதும் அப்பாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தனது அறியாமையை நினைத்து வருந்தினார்.

"இனிமேல் ஒரு மரத்தையும் வெட்ட மாட்டேன் முத்து" என்றவர் அன்றிலிருந்து மரம் வெட்டும் தொழிலை நிறுத்திவிட்டார். நிறைய மரக்கன்றுகளையும் நாட்ட ஆரம்பித்தார்.

# மூட்டாள் ராஜா



கரிசப்பட்டி என்ற ஊரின் ராஜா, எந்தக் கலைகளையும் அறியாதவர். புத்திசாலியும் இல்லை. ஆனால், அவருக்கு மதியூகியான ஒரு மந்திரி இருந்தார். அவர் அனைத்து ஞானமும் பெற்றவர்.

ஒருநாள் கைதேர்ந்த பாடகர் ஒருவர் அந்த அரண்மனைக்கு வந்தார். அரசவையில் பாட அரசரிடம் அனுமதி கேட்டார்.

அரசர் மந்திரியைப் பார்த்தார். மந்திரி தலையை அசைத்தவுடன், பாடகருக்கு அடுத்தநாள் பாட அரசர் அனுமதி கொடுத்துவிட்டார். பாடகரும் அடுத்தநாள் பாட வருவதாகக் கூறிவிட்டு அரண்மனையை விட்டுச் சென்றார். அரசருக்கு இசையை ரசிக்கத் தெரியாது. இந்த இக்கட்டான நிலையை எவ்வாறு சமாளிப்பது என யோசித்துக்கொண்டு உலாவிக் கொண்டிருந்தார்.

அப்போது அங்கே மந்திரி வந்து சேர்ந்தார். மந்திரியைப் பார்த்ததும் ராஜாவிற்கு சந்தோஷம்.

"வாருங்கள் மந்திரியாரே... நாளை நடைபெறும் பாட்டுக் கச்சேரியை எவ்வாறு எதிர்கொள்வது என்று யோசித்துக்கொண்டிருந்தேன். நீங்களே வந்துவிட்டீர்கள்..." என்றார்.

"கவலைப்படாதீர்கள் மகாராஜா... அதற்கு ஒரு தீர்வு கொண்டுவந்திருக்கிறேன்... உங்களுக்குத்தான் நீண்ட முடியிருக்கிறதே. அந்த முடியில் யாருக்கும் தெரியாதவாறு நீண்ட கயிற்றைக் கட்டி நுனியை என் கையில் பிடித்துக்கொண்டு பாடகன் பாடும்போது இடையிடையே இழுப்பேன். அப்பொழுது "சபாஷ்' என்று மட்டும் சொல்லிக் கொள்ளுங்கள்..." என்று மந்திரி கூறினார்.

"சரி" என்று ராஜாவும் ஒத்துக் கொண்டார்.

அடுத்தநாள் அவை கூடியது. யாருக்கும் தெரியாமல் ராஜாவின் முடியில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் நுனியைப் பிடித்துக்கொண்டு மந்திரி அமர்ந்துகொண்டார். ராஜாவும் தமது இருக்கையில் அமர்ந்து கொண்டார். அவையினர் அனைவரும் அமர்ந்திருந்தனர். பாடகர் பாட ஆரம்பித்தார். சுவைமிகுந்த பகுதி வரும்போது மந்திரி கயிற்றை இழுக்க, ராஜா "சபாஷ்" என்று சொல்லிக்கொண்டே இருந்தார். பாடகர் பல பாடல்களைப் பாடினார். ராஜாவும் "சபாஷ்" போட்டுக் கொண்டே இருந்தார். முடிவாக முகாரி ராகப் பாடல் ஒன்றை பாடகர் பாட ஆரம்பித்தார். ராஜா அழுதுகொண்டே சபாஷ் போட ஆரம்பித்தார்.

நிகழ்ச்சி முடிந்ததும், ராஜா, பாடகருக்கு பரிசில்கள் வழங்கி அனுப்பிவைத்தார். அன்று மாலை அவரிடம் வந்த மந்திரி, "ராஜாவே நான் இழுக்க பாடல்களுக்கு சபாஷ் போட்டீர்கள் அதெல்லாம் சரிதான். முகாரி ராகப் பாடல்கள் வந்தவுடன் அழுதுகொண்டே சபாஷ் போட்டீர்களே... உங்களுக்கு அது அழுகைப் பாடல் என்று தெரியுமா?" என்றார்.

"என்ன மந்திரியாரே... இப்படிக் கூறுகிறீர்கள்? நீங்கள் என் முடியை இழுத்தபோது வலி தாங்க முடியாமல் அல்லவா நான் அழுதேன்" என்றார் ராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடிப்புக்கள்



## வாலேஸ் கரோதர்ஸ் (Wallace Carothers)

1935- அமெரிக்கா




நைலோன்



## காய் லுன் (Cai Lun)

கி.பி 105 - சீனா



கடதாசி



## பார்ட்டோலோமியோ கிறிஸ்டோஃபோரி (Bartolomeo Cristofori)

1700-இத்தாலி



பியானோ



## கிரிஸ்டியன் ஹைஜென்ஸ் (Chiristian Huygens)

1656 நெதர்லாந்து



பென்டுலம் கடிகாரம்



## ரோலன்ட் ஹில் (Rowland Hill)

1837- இங்கிலாந்து




தபால் முத்திரை



## ரெனே லேனெக் (Rene Laennec)

1816 - பிரான்ஸ்



ஸ்டெ(த்)தஸ்கோப்

(தொடரும்)





இன்னும் பல இடங்களை பார்ப்பதற்கான வாய்ப்பு!

அறிவைத் தேடிச் செல்லும் சிறார்களுக்கு

12 வயதிற்கு குறைந்த தம்பி தங்கைகள் எவரேனும் விண்ணப்பிக்க முடியும்

கல்வி கற்கும் தம்பி தங்கைகளின் அறிவை வளர்க்கும் பொருட்டு, செலிங்கோ லை.ஃப் ரன்தரு சாரிகா எனும் கல்விச் சுற்றுலா ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இம் முறை நாங்கள் கொழும்பு தேசிய நூதனசாலை, கோள் மண்டலம், BMICH, பத்தரமுல்லை தியத பூங்கா மற்றும் கொழும்பு நகரத்தைச் சுற்றியுள்ள சில பிரதான இடங்களை பார்ப்பதற்கு சிறார்களை அழைத்துச் செல்ல உள்ளோம்.

செலிங்கோ லை.ஃப் கிளை உள்ள சகல நகரங்களிலிருந்தும் 4 வெற்றியாளர்கள்

எந்தவொரு செலிங்கோ லை.ஃப் கிளைக்கும் சென்று, 2014ம் ஆண்டுக்கான கால அட்டவணையுடன், விண்ணப்பப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்ளுங்கள். அவ் விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்து, 'செலிங்கோ லை.ஃப்', இல. 134, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். இல்லையெனில் எந்தவொரு கிளையிலும் ஒப்படைக்க முடியும்.

விண்ணப்பங்களை ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி 2013 நவம்பர் 30.

வெற்றிபெறும் தம்பி, தங்கைகள் குலுக்கல் மூலமே தெரிவு செய்யப்படுவர். வெற்றிபெறுவோர் அவர்களுடைய தாய் அல்லது தந்தை அல்லது பொறுப்பாளர் உடன் இச்சுற்றுலாவில் பங்குபெற முடியும். அதற்கான அனைத்து வசதிகளும் அவர்களுக்கு இலவசமாக செய்து கொடுக்கப்படும்.

தம்பி, தங்கைகள் 250 பேர் ... ஒரு நாள் கொழும்புச் சுற்றுலா!

மேலும் 750 ஆறுதல் பரிசுகள்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

WP/GT/3936


PHOENIX O&M

செலிங்கோ லை.ஃப்

செலிங்கோ லை.ஃப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் உயரம



'தீவு' என்பது நான்கு புறங்களும் கடலால் சூழப்பட்ட தரைப்பகுதியாகும். உட்பகுதியில் வாவிகள் உருவாகக்கூடியவாறு பாறைகளைக் கொண்ட தீவுத் தொகுதிகளை 'தீவுக் கூட்டங்கள்' என்பர். தீவுகள் உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியாகவும் திகழ்கின்றன. இவ்வாறான அழகிய தீவுகளில் உயரமான சில தீவுகளின் விபரங்களை இதோ உங்களுக்காகத் தருகின்றோம்.



## ஹொன்ஷு

**அமைவிடம்:** ஜப்பான்

**உயரம்:** 3,776 (12,388 அடி)

இது, ஜப்பானில் உள்ள மிகப் பெரிய தீவாகும். அத்துடன், உலகின் ஏழாவது பெரிய தீவாகவும் புகழ்பெற்றுள்ளது. இந்தோனேஷியாவின் ஜாவா தீவுக்கு அடுத்ததாக, உலகில் அதிக மக்கள் வசிக்கும் தீவாக ஹொன்ஷு கருதப்படுகின்றது. இத்தீவானது, அப்பிள், தேயிலை என்பவற்றுடன், புளிப்புச் சுவையுடைய பழச்செய்கைகளுக்கும் பிரபல்யம் பெற்ற இடமாகத் திகழ்கின்றது.

## நியூ கினியா



**அமைவிடம்:** இந்தோனேஷியா, பப்புவா நியூ கினியா

**உயரம்:** 4,884 மீற்றர் (16,094 அடி)

கிறீன்லாந்துக்கு அடுத்ததாக உள்ள உலகின் இரண்டாவது மிகப்பெரிய தீவாக நியூ கினியா உள்ளது. இது 786,000 பரப்பளவு கொண்ட பாரிய நிலப் பகுதியாகும். இத்தீவின் மேற்குப்பகுதி இந்தோனேஷியாவிற்கும் கிழக்குப் பகுதி பப்புவா நியூ கினியாவிற்கும் உரியதாக உள்ளது. தென்கிழக்கு பசுபிக் சமுத்திரத்தில் மலாய் தீவுக் கூட்டத்தின் தென்கிழக்கில் இந்தத் தீவு அமைந்துள்ளது. கலாசாரப் பன்மைத்துவம் கொண்ட உலகின் பிரதான நாடாக இதனைக் கருத முடியும். இங்கு 8,841 மொழிகள் பயன்பாட்டில் உள்ளன. இங்கு சனத்தொகை 62 மில்லியன் ஆகும். இவர்களில் பெரும்பாலானோர் கிராமப் புறங்களிலேயே வசிக்கின்றனர். 18 சதவீதமானவர்கள் மட்டுமே நகர்ப் புறங்களில் வசிக்கின்றனர். கலாசார, பூகோள ரீதியில் மட்டுமன்றி, இதுவரை இனங்காணப்படாத தாவரங்கள் மற்றும் விலங்குகளைக் கொண்ட நாடாகவும் விளங்குகின்றது.

## போர்னியோ



**அமைவிடம்:** இந்தோனேஷியா, மலேசியா, புருணை

**உயரம்:** 4,095 மீற்றர் (13,435 அடி)

இது உலகின் மூன்றாவது பெரிய தீவாகும். இந்தோனேஷியாவின் ஜாவா தீவுக்கு வடக்கே அமைந்துள்ளது. புருணை, இந்தோனேஷியா, மலேசியா ஆகிய மூன்று நாடுகளுக்கும் உரிய பகுதிகளைக் கொண்ட தீவாக இது உள்ளது. இத்தீவின் நிலப்பகுதியில் 73 சதவீதம் இந்தோனேஷியாவுக்கும் 26 சதவீதம் மலேசியாவுக்கும் உரியது. புருணை தேசத்திற்கு ஒரு சதவீதம் உரிமையாக உள்ளது. மிகப் பழமையான மழைக்காடுகள் இத்தீவில் உள்ளன.

## லொம்பொக்



**அமைவிடம்:** சுண்டா சிறுதீவு, இந்தோனேஷியா

**உயரம்:** 3,726 மீற்றர் (12,224 அடி)

இந்தோனேஷியாவின் டென்காரா மாகாணத்தின் மேற்கு நுசாராவில் லொம்பொக் தீவு அமைந்துள்ளது. சுண்டா சிறு தீவுகளின் ஒரு பகுதியாகவும் இதனைக் கருத முடியும். இதன் பரப்பளவு 4,725 சதுர கிலோ மீற்றராகவும் சனத்தொகை 3.16 மில்லியனாகவும் உள்ளது. 'மாத்தரம்' என்பது இத்தீவின் மிகப்பெரிய நகரம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ான தீவுகள் சில...



## யுனிமெக்

**அமைவிடம்:** அமெரிக்கா

**உயரம்:** 4,275 மீற்றர் (14,026 அடி)

ஐக்கிய அமெரிக்காவின் அலாஸ்காவின் கிழக்கு அலுஷியன் தீவுக் கூட்டத்திற்குரிய ஒரு தீவாகும். இது 30 கி.மீற்றர் நீளத்தையும் 129.01 சதுர பரப்பரளவையும் கொண்டது. 'அகுட்டன்' எரிமலை இத்தீவிலேயே அமைந்துள்ளது. இதன் சனத்தொகை 1,027 ஆகும்.




## ஹவாய்

**அமைவிடம்:** அமெரிக்கா

**உயரம்:** 4,205 மீற்றர் (13,796 அடி)

இது, வட பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள எரிமலைகள் சூழ்ந்திருக்கும் ஒரு தீவாகும். ஹவாய் தீவுக் கூட்டங்களில் மிகப் பெரிய தீவான இது, ஐக்கிய அமெரிக்காவின் மிகப்பெரிய தீவாகவும் கருதப்படுகின்றது. இதன் பரப்பளவு 4,028 சதுர மைல்களாகும். 1959 ஒகஸ்ட் 21ஆம் திகதி ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்துகொண்டது. உல்லாசப் பிரயாணிகளின் சொர்க்கபுரியாகவும் இத்தீவு திகழ்கிறது.



## தாய்வான் (ஃபர்மோசா)

**அமைவிடம்:** சீனா

**உயரம்:** 3,952 மீற்றர் (13,435 அடி)

கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு தீவாகும். சீனாவின் தென்கிழக்கே 180 கி.மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. 50 ஏக்கர் பரப்பளவைத் தன்னகம் கொண்ட இத்தீவுக்கு அருகாமையில் மேலும் இரண்டு சிறு தீவுகள் உள்ளன.



## சுமாத்ரா

**அமைவிடம்:** இந்தோனேஷியா

**உயரம்:** 3,805 மீற்றர் (12,484 அடி)

மேற்கு இந்தோனேஷியா பகுதியில் அமைந்துள்ளது. இது, இந்தோனேஷியாவுக்குச் சொந்தமான மிகப்பெரிய தீவாகும். உலகின் ஆறாவது மிகப்பெரிய தீவாகவும் கருதப்படுகின்றது. 473,481 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையும் இது கொண்டுள்ளது. 'மேடென்' என்பது இத்தீவின் பெரிய நகரமாக உள்ளது. இதன் சனத்தொகை 50,365,538 ஆகும்.



## தென் தீவு (சவுத் ஐலன்ட்)

**அமைவிடம்:** நியூஸிலாந்து

**உயரம்:** 3,755 மீற்றர் (12,320 அடி)

நியூஸிலாந்துக்குரிய இரண்டு தீவுகளில் பெரிய தீவாக இந்த தென் தீவு கருதப்படுகின்றது. மற்றையது மிகவும் பிரசித்தி பெற்ற வடக்குத் தீவாகும். இத்தீவின் மேற்கு எல்லை தஸ்மன் கடலுடனும் தெற்கு மற்றும் கிழக்கு எல்லைகள் பசுபிக் சமுத்திரத்துடனும் தொடர்புபட்டுள்ளன. வடக்குத் தீவினைவிட, 33 சதவீத பரப்பளவை அதிகம் கொண்டதாக தென் தீவு உள்ளது.

பிரியா

## மெஜிக் உலகில்...

# விரல்களின் பலத்தால் 'டூத்பிக்'ஐ மாயமாக மறையச் செய்வோம்!

**தேவையானவை:**

★ பெருவிரல் நகத்தின் அளவிலான-வெளிப்படையாகத் தெரியக் கூடிய செலோடேப் துண்டொன்று.

★ பெருவிரலின் நீளம் கொண்ட டூத்பிக் ஒன்று (ஈர்க்கிலையும் பயன்படுத்த முடியும்).



★ ★ ★

கையில் வைத்திருக்கும் டூத்பிக்கை ஒரே தடவையில் காணாமற்போகச் செய்வதே இந்த மாயாஜால வித்தையாகும். விரல்களை வேகமாகவும் தந்திரோபாயமாகவும் இயக்கும் ஆற்றலிலேயே இந்த மாயாஜால வித்தையின் ரகசியம் தங்கியுள்ளது.


## செய்முறை:



**முதல் கட்டம்:—**

இங்கு காட்டப்பட்டுள்ளவாறு விரல்களை மடித்துப் பார்வையாளர்களுக்குக் காட்டுங்கள். இவ்வாறு காட்டுவதன் நோக்கம், பெருவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையில் டூத்பிக்கை வைத்திருப்பதாகும்.


**இரண்டாவது கட்டம்:**



வலது கையில் இருந்து இடது கைக்கு மாயாஜால அசைவை வெளிப்படுத்தி, இடது கையை விரியுங்கள். இப்போது பாருங்கள்... டூத்பிக் காணாமல் போய்விட்டது. இதன்போது கைகளின் முன்பகுதியை வெளிக்காட்டாமல் மறைத்து விடுவது அவசியமாகும்.

**இதன் ரகசியம்**

டூத்பிக் காணாமற்போனதன் ரகசியம் செலோடேப் துண்டாகும். இதன்மூலம் பெருவிரலின் நகத்தில் டூத்பிக்கை வைத்து ஒட்டிக்கொள்ளுங்கள். முதலாவது கட்டத்தில் உள்ளவாறு கையை வைத்திருக்கும்போது அது மறைந்துள்ளது.



அடுத்ததாக, இரண்டாம் கட்டத்தில் உள்ளவாறு கைகளினால் மாயாஜால அசைவினை வெளிப்படுத்துவதானது, கைகளை உயர்த்தும்போது, நகத்தில் வைத்து ஒட்டப்பட்டுள்ள டூத்பிக்கினை வெளியில் தெரியாதவாறு கவனத்தை திசை திருப்பவே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் பகுதி - I (தரம் - 04)

பெயர்: ..................................................

★ பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன்கீழ்க் கோடிடுக.

01) வீட்டுத் தோட்டத்தில் காணப்படும் களைப்பூண்டு எது?
1. மூக்குத்திப்பூண்டு 2. நன்னாரி
3. வெடிபலவன் 4. சீதேவியர் செங்கழுநீர்

02) பூனைக்கு வயிற்றுக்கோளாறு ஏற்படும்வேளை தேடியுண்ணும் மூலிகைத் தாவரம் எது?
1. பால் அறுகு 2. குப்பைமேனி
3. ஆமணக்கு 4. மூக்குத்திப்பூண்டு

03) பழுதடைந்த உணவு வகைகளில் அவதானிக்கக்கூடிய மாற்றம் அல்லாதது;
1. பூஞ்சணம் பிடித்திருத்தல் 2. மணம் வீசுதல்
3. நீல நிறமாக மாறியிருத்தல் 4. கருமை நிறமாகத் தோன்றுதல்

04) வீட்டில் பானம் தயாரிக்க உதவாதது எது?
1. எலுமிச்சை 2. விளாம்பழம் 3. நன்னாரி 4. லாவுல்

05) ஊதுகுழல் செய்யப் பொருத்தமான இலை;
1. பூவரசு 2. பப்பாசி 3. பலா இலை 4. மாவிலை

06) எமது வீட்டில் இயற்கையாக வாழாத பிராணி எது?
1. பல்லி 2. இராமபாணம் 3. எலி 4. தும்பி

07) தேசியகொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்படும் சந்தர்ப்பம் எது?
1. தேசிய விழாக்கள் 2. அரச விழாக்கள்
3. சுதந்திர தின விழா 4. அரச தலைவர்கள் மரணித்தல்

08) எப்போதும் ஜோடியாகப் பறந்து திரியும் பறவை இனம் எது?
1. கிளி 2. மைனா 3. வௌவால் 4. காகம்

09) அதிகளவு உளச்சக்தி விரயமாகும் விளையாட்டு;
1. கிரிக்கெட் 2. சதுரங்கம்
3. சடுகுடு 4. சில்லுக்கோடு

10) இரை மீட்கும் பிராணியாக அமைவது எது?
1. நாய் 2. பூனை 3. கோழி 4. மாடு

11) பொருளாதார நோக்கத்திற்காக வளர்க்கப்படும் செல்லப்பிராணி எது?
1. மீன் 2. முயல் 3. கோழி 4. நாய்

12) மண்ணில் புதைத்தபோதும் உக்காத பொருள்;
1. சாக்கு 2. சிரட்டை 3. கண்ணாடி 4. மட்டை

13) குழுவாகச் செய்யும் வேலையாக அமையாதது எது?
1. கரை வலை இழுத்தல் 2. அரிவி வெட்டுதல்
3. நாற்று நடுதல் 4. வண்டி ஓட்டுதல்


14) நீர் தேவைப்படும் கைத்தொழில் எது?
1. ஆடை தயாரித்தல் 2. பாய் பின்னுதல்
3. மீன்பிடித்தல் 4. பழரசம் தயாரித்தல்

15) கிராமிய விளையாட்டில் பாவிக்கப்படும் விதை;
1. மிளகு 2. தேங்காய் 3. கடுகு 4. குன்றுமணி




## பகுதி -II

01) கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான படத்தின் பெயரை தெரிந்து எழுதுக.



1. விஷத்தை வாலில் கொண்டு திரியும் பிராணி ..............................
2. தமது உடலில் உள்ள பொருளைக் கொண்டு வீடு அமைப்பது ..............................
3. பைலேரியா நோயைப் பரப்புவது ..............................
4. தன்னைப் பாதுகாக்க தனது உடல் உறுப்பை இழக்கக்கூடியது ..............................
5. மண்ணை வளப்படுத்தி பயிர்களுக்கு நன்மை செய்வது ..............................
6. வயிற்றோட்டத்தை ஏற்படுத்துவது ..............................

02) சரியாயின் 'சரி' எனவும் பிழையாயின் 'பிழை' எனவும் அடையாளமிடுக.
1. அரசாங்க விழாவின்போது முதன்முதலில் ஏற்றப்படுவது பௌத்த கொடி. (.....)
2. பழுதடைந்த கறிகளில் இருந்து துர்மணம் வீசும். (.....)
3. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் அசுத்த நீரில் முட்டைகளை இடும். (.....)
4. செல்லப்பிராணிகளை கூடுகளில் அடைத்து வளர்ப்பது அவற்றின் சுதந்திரத்தைப் பறிப்பதாகும். (.....)
5. மாமிச உணவிற்குப் பதிலாக சோயா அவரைகளைப் பயன்படுத்தலாம். (.....)
6. உப்பு உணவிற்கு சுவையூட்டப் பயன்படுகிறது. (.....)

03) கீழ் தரப்பட்டுள்ள விடைகளைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையளிக்க.

பால், சீனி, உப்பு, கருவாடு, மீன், முட்டை

1. உணவு பழுதடையாது தடுக்க உதவுவது ..............................
2. பதனிடப்பட்ட உணவு ..............................
3. யோகட் .............................. இருந்து தயாரிக்கப்படுகிறது.
4. மாம்பழத்தைப் பாதுகாக்கப் பயன்படுவது எது? ..............................
5. கடலில் இருந்து பெறப்படுவது ..............................
6. மாமிச உணவில் அடங்கும் உணவு ..............................
7. நிறையுணவு என நீர் கருதுவது எது? ..............................

04) அட்டவணையை நிரப்புக.

- சிரட்டை
- மட்டை
- கண்ணாடி
- பலகை
- பொலித்தீன்
- ரெஜிஃபோம்
- துணி
- பிளாஸ்டிக்

| உக்கும் கழிவுகள் | உக்கா கழிவுகள் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிலவில் காலடி வைத்த முதல் மனிதன்
# நீல் ஆம்ஸ்ட்ரோங்

அமெரிக்காவின் பெயரை உலகெங்கும் பரவச் செய்யும் நோக்கத்துடன், தனது உயிரைப் பணயம் வைத்து விண்வெளிக்குச் சென்று, நிலவில் காலடி வைத்த முதல் மனிதனாக 'நீல் ஆம்ஸ்ட்ரோங்' வரலாற்றில் இடம்பிடிக்கின்றார். சிறுவயது முதல் விமானத்தை செலுத்துவதில் ஆர்வம் கொண்ட இவர், பிற்காலத்தில் விமானம் ஓட்டுவதில் பாண்டித்தியத்தையும் அத்துறை சார்ந்த உயர்கல்வியையும் கற்றதனூடாக, மிகச் சிறந்த அறிவைப் பெற்றார். இவர், சக விண்வெளி வீரர்களான எட்வின் ஓல்ட்ரின் மற்றும் மைக்கல் கொலின்ஸ் ஆகியோருடன் இணைந்து 1969 ஜூலை 20 ஆம் திகதி மேற்கொண்ட இந்த சாகசம் உலக மக்களைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது எனலாம்.







ஆம்ஸ்ட்ரோங் பங்குபற்றிய ஜெமினி VIII மற்றும் அப்பலோ 11 ஆகிய விண்வெளி ஆராய்ச்சிப் பணிகளுக்கெனப் பயன்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இலச்சினைகள்.



அமெரிக்க அரசாங்கத்தினால் வழங்கப்படும் சுதந்திரத்திற்கான ஜனாதிபதி பதக்கம், காங்கிரஸ் சபையினால் வழங்கப்படும் சிறந்த விண்வெளி வீரருக்கான சிறப்புப் பதக்கம், அமெரிக்க பிரஜைகளுக்குக் கிடைக்கும் உயரிய விருதாகக் கருதப்படும் 'தங்க விருது' உட்பட, பல விருதுகளைப் பெறும் வாய்ப்பினை நீல் ஆம்ஸ்ட்ரோங் பெற்றுக்கொண்டார்.


**1930**
ஒகஸ்ட் 5 ஆம் திகதி அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் பிறந்தார்.

**1936**
முதலாவது விமானத்தைச் செலுத்துவதற்கான ஆற்றலை முதலில் வெளிப்படுத்தினார்.

**1945**
தமது 15 ஆவது வயதில் விமானங்களைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்டார்.

**1949**
அமெரிக்க விமானப் படையில் விமான ஓட்டியாக வட-தென் கொரிய யுத்தத்தில் பங்களிப்புச் செய்தார்.

**1955**
அமெரிக்காவின் பர்டியூ (Purdue) பல்கலைக்கழகத்தில் விமானப் பொறியியல் துறையில் பட்டம் பெற்றார். அந்நாட்டின் முதலாவது விண்வெளி ஆய்வுக் குழுவிலும் இடம்பிடித்தார்.




**1956**
தேசிய விமான ஆலோசனை கமிஷனின் (NACA- National Advisory Committee for Aeronautics) பொறியியலாளரா கவும் பயிற்சி விமானியாகவும் நியமனம் பெற்றார்.

X - 15 ரொக்கெட் விமானத்தைச் செலுத்தும் விமானியானார்.

செலுத்திய அதிகபட்ச உயரம் 207,000 அடி.

**1956**
தென் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் இணைந்து விண்வெளி விஞ்ஞானம் தொடர்பில் பட்டத்தைப் பெற கற்கைநெறியொன்றைத் தொடர்ந்தார்.

அதே ஆண்டில் ஜெனட் எலிசபெத் ஷெரோனை மணம்முடித்தார். இருவரும் மூன்று பிள்ளைகளின் பெற்றோராயினர். 1962 ஆம் ஆண்டு அவர்களின் பெண் குழந்தை மரணமடைந்தது.

**1962**
அமெரிக்காவின் நாஸா நிறுவனத்தின் விண்வெளி ஆராய்ச்சி தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து கொண்டார்.

NEIL ARMSTRONG

**1966**
ஜெமினி VIII நடவடிக்கையின் விண்வெளி வீரராகப் பங்களிப்பு செய்தார்.

**1969**
ஜூலை 16 ஆம் திகதி அப்பலோ 11 விண்கலத்தில் பயணித்து, ஜூலை 20 ஆம் திகதி நிலவில் காலடி வைத்தார்.

"மனிதனுக்கு இது ஒரு சிறிய அடி மட்டுமே. ஆனால், முழு மானிட சமுதாயத்திற்கும் இது ஒரு மிகப்பெரிய பாய்ச்சலாகும்"




நிலவில் சஞ்சரித்த சம்பவத்தை அன்றைய பத்திரிகைகள் செய்திகளாக வெளியிட்ட விதம்.

**1969**
இவர்களுக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டது.
ஜூலை 24 ஆம் திகதி நிலவில் சஞ்சரித்துவிட்டு மீண்டும் பத்திரமாக பூமிக்குத் திரும்பினார்.

**1971**
நாஸா நிறுவனத்தில் இருந்து விலகினார். 1979 ஆம் ஆண்டு வரை சின்சினாட்டி பல்கலைக்கழகத்தில் விண்வெளி ஆராய்ச்சி பொறியியலாளராக பணியாற்றினார்.

**1985-86**
விண்வெளி தொடர்பிலான தேசிய ஆணைக்குழுவின் (National Commission on Space) அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டார்.




செலஞ்சர் விண்வெளி ஓடம் விண்வெளிக்கு ஏவப்பட்ட சில மணி நேரங்களில் விண்வெளியில் வெடித்துச் சிதறியதால், அதில் இருந்த 7 விண்வெளி வீரர்கள் உயிரிழந்தனர்.

**1986**
ஜனவரி 28 ஆம் திகதி நடைபெற்ற செலன்ஜர் விண்வெளி ஓடம் வெடித்துச் சிதறிய சம்பவம் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் உப தலைவராகப் பணியாற்றினார்.

**1994**
கெரல் ஹேல்ட் நைட் என்ற பெண்ணை இரண்டாவதாக திருமணம் புரிந்தார்.

2011 இல் எடுக்கப் பட்ட ஆம்ஸ்ட்ரோங்கின் புகைப்படம் ஒன்று.

**2012**
ஒகஸ்ட் 25 ஆம் திகதி அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தின் சின்சினாட்டியில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.




ஆம்ஸ்ட்ரோங்கின் பெயரில் Armstrong Air and Space Museum என்ற ஆகாய விண்வெளி அருங்காட்சியகம் அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.




ஆம்ஸ்ட்ரோங்கை நினைவுகூரும் நினைவு முத்திரைகள் சில...



ஆம்ஸ்ட்ரோங்கை நினைவுகூரும் முகமாக பர்டியூ பல்கலைக்கழக முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரின் உருவச்சிலை.

நீல் ஆம்ஸ்ட்ரோங்கின் கையொப்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரியல் வகைப்பாடு

## அரளிப் பூ



அரளி நச்சுத்தன்மை வாய்ந்த ஒரு தாவரமாகும். நீளமான இலைகளுடன் காட்சியளிக்கும் அரளித் தாவரத்தில் செவ்வரளி, வெள்ளரளி ஆகிய வகைகள் உள்ளன. இதனை மலர் மாலைகளாகக் கட்டி மதஸ்தலங்களில் பயன்படுத்துவர். மேலும், இந்த மலர்கள் காட்சிக்காக வைக்கப்படுவதும் உண்டு.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : பூக்கும் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : இருவித்திலைத் தாவரம் |
| (தரப்படுத்தப்படாத) | : *Asterids* |
| வரிசை | : *Gentianales* |
| குடும்பம் | : *Apocynaceae* |
| பேரினம் | : *Nerium L* |
| இனம் | : *N.oleander* |


## நித்தியகல்யாணி



நித்திய கல்யாணி என்றும் சுடுகாட்டுப்பூ என்றும் இது அழைக்கப்படுகிறது. இச்செடி மடகஸ்காரில் மட்டுமே காணப்பட்ட ஒருவகைச் செடியாக இருந்தது. பின்னர் இது வெப்ப மண்டலப் பகுதிகளுக்கும், மென்வெப்பமண்டலப் பகுதிகளுக்கும் பரவியது. இச்செடியின் பூ வெள்ளை நிறத்தில் அல்லது இளஞ் சிவப்பு நிறத்தில் காணப்படும். பூவிதழ்கள் கூடும் நடுப்பகுதியில் அடர்ந்த சிவப்பு நிறமாகக் காணப்படும். இதன் உயிரியல் வகைப்பாட்டுப் பெயர் *Catharanthus roseus* என்பதாகும். இது ஒரு மூலிகைச் செடியாகும். இச்செடி ஏறத்தாழ ஒரு மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| பிரிவு | : மெக்னோலியோபைட்டா |
| வகுப்பு | : மெக்னோலியோப்சிடா |
| வரிசை | : *Gentianales* |
| குடும்பம் | : *Apocynaceae* |
| பேரினம் | : *Catharanthus* |
| இனம் | : *C.roseus* |

## ரோஜாப் பூ



முளரிப் பூ (Rose), முளரி பேரினத்தின் ரோசசி குடும்பத்தைச் சேர்ந்தது. இது ஆண்டு முழுவதும் விளையக்கூடிய புதர் அல்லது படர்கொடி வகைத் தாவரமாகும். இதில் நூறு வகைகளும் பலவித வர்ணங்களும் உள்ளன. இந்த தாவரம் மேலே ஏறுகின்ற அல்லது இறங்குகின்ற செங்குத்தான தண்டுப் பகுதிகளைக் கொண்டது. இவை பெரும்பாலும் கூரிய முட்கள் கொண்டதாக இருக்கும். ரோஜாவில் முட்கள் உண்டு என்பது பொதுவாக நிலவுகிற பிழையான ஒரு கருத்தாகும். முட்கள் என்பவை திருத்தி அமைக்கப்பட்ட கிளைகள் அல்லது தண்டுகள் ஆகும். ஆனால், ரோஜாவில் காணப்படும் இந்தக் கூரிய நீண்ட அமைப்புகள் திருத்தி அமைக்கப்பட்ட மேற்தோல் போன்ற திசுக்களாகும். இந்த தாவர வகையில் பெரும்பாலானவை ஆசிய கண்டத்தைச் சேர்ந்தவை. சில வகைகள் ஐரோப்பா, வட அமெரிக்கா, வடமேற்கு ஆபிரிக்காவை சேர்ந்தவை. உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த இந்த தாவர வகைகளை எளிதாக கலப்பியலுக்கு உட்படுத்த முடிவதால், பலவிதமான தோட்ட ரோஜாக்களைக் காண முடிகின்றது.

ரோஜா மலர்களிலிருந்து நீராவி முறையில் பிரித்தெடுக்கப்படும் 'அத்தர்' எனப்படும் ரோஜா எண்ணெய் பல நூற்றாண்டுகளாக நறுமணப் பொருட்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படும் ரோஜா நீர் ஆசிய, மத்திய கிழக்கு நாடுகளின் சமையல் முறையில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. ரோஜாவின் இடுப்பு அரிதாக பழக்கூழ், பழக்கூழ்பாகு, பழப்பாகாக மாற்றப்படுகிறது. ரோஜா இடுப்பு விதை எண்ணெய் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.

| | |
|---|---|
| திணை (இராச்சியம்) | : தாவரம் |
| பிரிவு | : பூக்கும் தாவரம் |
| வகுப்பு | : *Magnoliopsida* |
| வரிசை | : *Rosales* |
| குடும்பம் | : *Rosaceae* |
| துணைக்குடும்பம் | : *Rosoideae* |
| பேரினம் | : *Rosa* |

(தொடரும்)


## துஷாரா கலைவட்டம் - 2013

### எக்ரோன் அகில இலங்கை சித்திரப்போட்டி

**(இலங்கையில் 15 பிரிவுகளின் கீழ் நடத்தப்படுகின்ற ஒரேயொரு மிகப்பிரமாண்டமான சித்திரப்போட்டி)**

எக்ரோன் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடனும் விஜய், விஜய, பிலிந்து பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடனும் துஷாரா கலைவட்டத்தினால் அகில இலங்கை ரீதியில் சித்திரப்போட்டி நடத்தப்படுகின்றது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்களுடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளும் வழங்கப்படும். மேற்படி போட்டி தொடர்பான விபரங்கள் வருமாறு:

**போட்டி விதிமுறைகள்**

- அளவு - அங்குலம் 14×18 அளவு
- வர்ணம் - சோக் (வர்ணப்பூச்சு), ஒயில் பெயின்ட், போஸ்டர் பெயின்ட், வோட்டர் கலர்ஸ் இதில் விரும்பியதைப் பயன்படுத்தலாம்.
- தலைப்பு - எந்தவொரு தலைப்பிலும் சித்திரங்களை வரையலாம்.
- ஒருவர் ஆகக்கூடியதாக 5 சித்திரங்களை அனுப்பி வைக்கலாம்.
- பிரிஸில் போர்ட், கேன்வஸ் துணி, ட்ரொயிங் பேப்பர் இவற்றில் விருப்பமான ஒன்றில் சித்திரத்தை வரையலாம்.

**இவற்றை வெல்லுங்கள்**

வெற்றிக் கிண்ணங்கள் - 68
தங்கப் பதக்கங்கள் - 188
வெள்ளிப் பதக்கங்கள் - 15
வெண்கலப் பதக்கங்கள் - 15
பரிசு/சான்றிதழ்கள் - 5000

**போட்டிப் பிரிவுகள்**

- முன்பள்ளி மாணவர்கள் (5 வயதிற்குக் கீழானோர்)
- பாடசாலை மட்டத்தில் - தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையில் (13 பிரிவுகள்)
- பகிரங்க போட்டிப் பிரிவு - பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது வேறு எவரும் (18 வயதிற்குக் கீழ்)

நீங்கள் இந்தப் போட்டியில் Acron தயாரிப்பான எந்தவொரு வர்ணத்தையும் (சோக், வோட்டர் கலர்ஸ், போஸ்டர் கலர், ஒயில் பெயின்ட்) பயன்படுத்தினீர்களாயின், அவற்றின் அட்டைப் பெட்டியில் காணப்படும் வெள்ளை நிற லேபிளை சித்திரத்தின் பின்புறம் ஒட்டி அனுப்பவும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படாத 2500 சித்திரங்களுக்குரிய சான்றிதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும். Acron குறியீட்டு இலச்சினை ஒட்டப்பட்டுள்ள சித்திரங்கள் மட்டுமே போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

| பரிசுத் தெரிவுகள் ( அகில இலங்கை) | | |
|---|---|---|
| முதலாவது இடத்தைப் பெறும் 15 பேர் | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக (தரம் 1 முதல் தரம் 13 வரை) | கிண்ணம், தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| இரண்டாவது இடத்தைப் பெறும் 15 பேர் | தெரிவிற்கு ஒருவர் வீதமாக | கிண்ணம்,வெள்ளிப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| மூன்றாவது இடத்தைப் பெறும் 15 பேர் | பிரிவுக்கு ஒருவர் வீதமாக | கிண்ணம், வெண்கலப் பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron விசேட வெற்றியாளர்கள் 150 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | தங்கப்பதக்கம், பரிசு, சான்றிதழ் |
| Acron சான்றிதழ் பெறுவோர் 400 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |
| திறமைச்சான்றிதழ் 2000 | ஒரு பிரிவிற்கு ஒருவர் வீதமாக | விருது, சான்றிதழ் |

Acron லேபிள் ஒட்டப்பட்ட மாணவர்களின் 100 சித்திரங்களை ஒன்றாக சேர்த்து அனுப்புகின்ற ஆசிரிய, ஆசிரியைமாருக்கு நினைவுச் சான்றிதழும் ஊக்குவிப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.
(இதற்கென குறிப்பிட்ட 100 சித்திரங்களுடன் ஆசிரியர்/ஆசிரியையின் பெயர், முகவரி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியனவற்றைக் குறிப்பிடல் வேண்டும்)
சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலுமான நடுவர்களாலேயே வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.
வெற்றியாளர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படுவதுடன், 'விஜய்' பத்திரிகையிலும் தொலைக்காட்சி, வானொலி மூலமும் அறிவிக்கப்படும். கண்காட்சிக்கென தெரிவு செய்யப்படுகின்ற 2500 சித்திரங்களும் தேசிய கலாபவனத்தின் பிரதான மண்டபங்கள் இரண்டிலும் கண்காட்சிக்கு வைக்கப்படுவதுடன், குறித்த 2500 சித்திரங்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் ஜோன் டி சில்வா ஞாபகார்த்த அரங்கில் வைத்து வழங்கப்படும்.

**போட்டி முடிவுத்திகதி: 2013 ஒக்டோபர் 30.**

**முகவரி:** துஷாரா கலைவட்டம், இலக்கம் - 16/19, பிங்ஹேன, பன்னிப்பிட்டி.
அல்லது கலர் கிராஃப்ட் லங்கா, 119, பெங்க்ஷால் வீதி, கொழும்பு-11.

**தொடர்புகளுக்கு** - 011 4962520, 0714483704. மேலதிக விபரங்களுக்கு 'விஜய்' பத்திரிகையை பார்க்கவும்.

## துஷ்தாரா கலைவட்டம்

THUSHARA KALAKAVAYA

அகில இலங்கை சித்திரப்போட்டி-2013

Acron® All Island Art Competition

விண்ணப்பப்படிவம் — Application Form

போட்டியாளரின் பெயர்:
Applicant's Name :

முன்பள்ளி/பாடசாலை/
பல்கலைக்கழகம்/பகிரங்க :
Pre School, Schools, University & Open Category :

பிறந்த திகதி:
Date of Birth :

ஆண்/பெண்
Sex : பெண் Female ☐ ஆண் Male ☐

வீட்டு முகவரி:
Personal Address :

தொலைபேசி இல:
Telephone :

வகுப்பு:
Grade :

சித்திரத்தின் தலைப்பு:
Topic :

பாவித்துள்ள வர்ணம்:
Medium of Expression
Oil, Water color, Poster CLR, Pastels :

| ................................ | ................................ | ................................ |
|---|---|---|
| போட்டியாளரின் கையொப்பம் | திகதி | பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம் |
| Applicant's Signature | Date | Parents/Guardians Signature |

பிரதான அனுசரணை: Acron
ஊடக அனுசரணை:

சித்திரக்கலையின் பேரபிமானம் பெற்ற முதன்மையாளர்களான துஷாரா கலைவட்ட அமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் இலவசமாகப் புத்தகம் படிக்க...





புத்தகப் பிரியர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடிய இணையத்தளமாக readanybook.com தளத்தைக் குறிப்பிடலாம். பெயருக்கேற்ப எந்தப் புத்தகத்தையும் படிக்க வழி செய்கிறது இந்தத் தளம். அதிலும் மிகவும் சுலபமாக, ebook வடிவில்!

இந்தத் தளத்தில் உங்களுக்குப் பிடித்தமான புத்தகத்தைத் தெரிவுசெய்து அந்தப் புத்தகத்தை அப்படியே ebook ஆகப் படிக்கத் துவங்கிவிடலாம். இதற்காக தனியே எந்த மென்பொருளையும் தரவிறக்கம் செய்ய வேண்டிய அவசியமில்லை. படிக்கப்போகும் புத்தகத்தைத் தரவிறக்கம் செய்ய வேண்டியதுமில்லை. புத்தகத்தைத் தெரிவுசெய்த பின், அதில் ஒரே ஒரு க்ளிக் செய்தால் போதும். அந்தப் புத்தகத்தைப் படிக்கத் துவங்கிவிடலாம். அதற்கான ரீடர், அதே பக்கத்தில் தோன்றுகிறது. எனவே, இணைய உலாவியை விட்டு வெளியே செல்லவும் தேவையில்லை.



புத்தகத்தில் பக்கங்களைத் திருப்புவதுபோல இங்கு ஒவ்வொரு பக்கமாக க்ளிக்செய்து படித்துக்கொண்டே இருக்கலாம். தேவை என்றால் ரீடரை மட்டும் பெரிதாக்கிப் படிக்கவும் இதில் வசதி உள்ளது. புத்தகங்கள் எமது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றதுபோல தனித்தனித் தலைப்புகளின்கீழ் தொகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு புத்தகம் பற்றிய சுருக்கமான அறிமுகத்தோடு அவற்றின் வகை குறிப்பிடப்பட்டு அத்தியாயம் அத்தியாயமாக ரீடரில் புத்தகம் விரிவது புத்தகப் பிரியர்களுக்கு உண்மையிலேயே பரவசமான அனுபவமாக இருக்கும்.




புத்தகப் பிரியர்களை இந்தத் தளம் நிச்சயம் கவரும். தங்கள் அபிமானத் தளமாக இதனைக் குறித்துக்கொள்ளலாம். இலவச இணைய வாசிப்பிற்கான இந்தத் தளத்தைப் புத்தகப்பிரியர்கள் தாராளமாக நாடலாம். இதற்கான இணையத்தள முகவரி: http://www.readanybook.com/ என்பதாகும்.

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இங்கே மடிக்கவும்



# Facebook ஐஸ் கிறீம்



உலகளவில் மிகவும் பிரபலமான சமூக வலைத்தளங்களாக ஃபேஸ்புக், டுவிட்டர் மற்றும் யூடியூப் போன்றவை திகழ்கின்றன. இதனை நன்கு அறிந்துவைத்துள்ள



பல்வேறு வர்த்தக நிறுவனங்கள், தமது வாடிக்கையாளர்களைக் கவரும் விதத்தில் ஃபேஸ்புக், டுவிட்டர், யூடியூப் போன்ற பிரபலமான சமூக வலைத்தளங்களின் பெயர்களைப் பயன்படுத்தி தமது விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்தி, நல்ல இலாபங்களை ஈட்டிக் கொள்கின்றன. கீ டெக்கள், புத்தகங்கள், ட ஷேர்ட்கள், குடைகள், பாதணிகள், கடிகாரங்கள், ஃபோன் கவர்கள் எனப் பல்வேறு பொருட்கள் இந்த நாமங்களைப் பொறித்தவாறு சந்தையில் விற்பனைக்கு இருப்பதை நாம் காணலாம். அத்துடன், ஹோட்டல்கள், விற்பனை நிலையங்கள்கூட இத்தகைய பெயர்களில் ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்நிலையில், 'Facebook ஐஸ் கிறீம்' என்ற பெயரில் ஒரு வகை ஐஸ் கிறீம் அண்மையில் க்ரோஷியாவில் அறிமுகமாகியுள்ளது. சிறுவர்கள் உட்பட, அனைவரையும் கவர்ந்துள்ள இந்த ஐஸ் கிறீம், அமோகமாக விற்பனை செய்யப்பட்டு வருவதாக, அண்மையில் க்ரோஷியாவிலிருந்து வெளியான செய்தியொன்று தெரிவித்துள்ளது. க்ரோஷியாவின் மேட்டர் தீவின் டிஸ்னொம் எனும் இடத்திலுள்ள 'வெலன்டினோ' எனும் ஐஸ் கிறீம் கடையிலேயே இது விற்பனைக்கு உள்ளது.



வெனிலா ஐஸ் கிறீமில் நீல நிற சிரப் ஒன்றினை ஊற்றியே இந்த ஐஸ் கிறீம் தயாரிக்கப்பட்டுள்ளது. இது சுவிங்கம் மற்றும் மிட்டாய் சுவையைக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளிடையே இந்த ஐஸ் கிறீம் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளதாக இந்தக் கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YouTube தரும் பயனுள்ள சில வசதிகள்




வீடியோ பகிர்வுச் சேவையான YouTube தளத்திற்கு அறிமுகமே தேவையில்லை. YouTube ஐ பாடல் காட்சிகளைப் பார்த்து ரசிக்கவும் நகைச்சுவை வீடியோக்களைப் பகிர்ந்துகொள்ளவும் நீங்கள் பயன்படுத்தி வரலாம். பிரபலமான செய்திக் க்ளிப்களைப் பார்க்க, திரைப்பட டிரைலர்களைக் காண என மேலும் பல வழிகளில் YouTube ஐப் பயன்படுத்தலாம். YouTube சார்ந்த பலரும் அறியாத மேலும் பல சேவைகளும் இருக்கின்றன. அந்தவகையில், பயனுள்ள YouTube வசதிகள் சிலவற்றை இங்கு பார்ப்போம்.





YouTube இல் உள்ள ஒரு பயனுள்ள வசதிதான் 'YouTube Live' (http://www.youtube.com/live) ஆகும். இதன்மூலம் தற்போது இணையத்தில் காணக்கிடைக்கும் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளைப் பார்த்து ரசிக்கலாம். குறிப்பிட்ட நேரத்தில் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் எவை என்பதை இதன் முகப்புப் பக்கத்திலேயே பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாமல், இந்த வசதியை வீடியோ உரையாடலுக்கான google hangout வசதியுடன் இணைத்தும் கொள்ளலாம். அப்போது google hangout இல் பங்கேற்காதவர்கள்கூட இதை நேரடி ஒளிபரப்பாகப் பார்க்க முடியும்.




YouTube இல் இருக்கும் மற்றுமொரு வசதிதான் YouTube Video Editor. YouTube Video Editor (http://www.youtube.com/editor) மூலம் உங்கள் வீடியோக்களை அழகாக எடிட் செய்து, பலரும் பார்த்து ரசிக்கச் செய்யலாம். காட்சிகளைச் சேர்ப்பது, பின்னணி இசையைச் சேர்ப்பது, எடிட் செய்வது, உப தலைப்புகள் கொடுப்பது என பல விதங்களில் வீடியோக்களை மெருகேற்றலாம். எதையும் தரவிறக்கம் செய்யாமல் உங்கள் பிரவுசரிலேயே இவற்றை மேற்கொள்ளலாம் என்பது இதன் சிறப்பு.

YouTube வழங்கும் மற்றொரு பயனுள்ள சேவை,




வீடியோக்களின் தரவிறக்க வேகத்தை அறிந்துகொள்வதாகும். சில நேரங்களில் வீடியோ கோப்புகள் க்ளிக் செய்தவுடன் தரவிறக்கம் ஆகாமல் தாமதமாகலாம். இவ்வாறான நேரங்களில் YouTube My Speed (http://www.youtube.com/my_speed) பக்கத்திற்குச் சென்றால், என்ன பிரச்சினை என்று தெரிந்துகொள்ளலாம். உங்கள் கணினியில் வீடியோ தரவிறக்கம் ஆகும் வேகம் தொடர்பான விவரங்களை இதன்மூலம் தெரிந்துகொண்டு செயற்படலாம். உங்கள் இணைய வேகம் மற்றும் சுற்றுப்புறத்தில் உள்ள இணைய வேகம் ஆகிய தகவல்களையும் இதன்மூலமாகத் தெரிந்துகொள்ளலாம்.



# விதவிதமான iPhone Stand கள்

அப்பிள் நிறுவனம் உலகெங்கும் உள்ள பெரும்பாலானோரை தனது சாதனங்களுக்கு அடிமையாக்கி வைத்துள்ளது என்றால் அதில் தவறில்லை. அப்பிளின் சாதனங்களைப் பயன்படுத்துவதை சிலர் பெருமையாகவும் கௌரவமாகவும் கருதுகின்றனர். அப்பிள் சாதனங்களுக்காகக் காத்திருந்து அவற்றைப் போட்டி போட்டுக்கொண்டு வாங்கும் மக்கள் கூட்டமும் உள்ளது. அண்மைக்காலத்தில் அப்பிள் iPhone கள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள சாதனமாக உள்ளன. ஆகவே, அவற்றுக்கென விதவிதமான-வித்தியாசமான-அழகிய iPhone Stand கள் உருவாக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.



Acrylic iPhone Stand Docking Station




Bermuda Rough iPhone Dock



Decoupage iPhone Dock




BloomBox iPhone Charging Docking Planter



Oak iPhone 5 Charging Station



Washi Paper Phone Stand



Concrete iPhone 5 Dock


**அன்பு வாசகர்களே...!**

'நுட்பம்' பகுதியில் வெளியாகும் தகவல்கள் குறித்து உங்கள் கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். அத்துடன், இப்பகுதியூடாக நீங்கள் மேலதிகமாக அறிய விரும்புகின்ற கணினி சார்ந்த விடயங்கள் குறித்தும் எமக்கு அறியத்தாருங்கள். nutpamvijey@gmail.com எனும் மின்னஞ்சலூடாக, உங்கள் கருத்துக்களையும் நீங்கள் அறிய விரும்பும் விடயங்களையும் இன்றே முன்வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மின்னஞ்சலில் இருக்க வேண்டிய 5 முக்கிய விடயங்கள்







'கய் கவாஸாகி' என்பவர், இணைய எழுத்தாளர், முதலீட்டாளர், இணையத் தொழில் முனைவோர் என பல முகங்களைக் கொண்டவர். மின்னஞ்சலுக்கான ஐந்து முக்கிய விடயங்களை இவர் முன்வைத்திருக்கிறார். கவாஸாகி, புதிதாக ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். 'APE: How to Publish a Book' என்பது தான் அவரது புதிய புத்தகத்தின் தலைப்பு. இந்தப் புத்தகத்தில்தான் அவர் மின்னஞ்சலுக்கான இலக்கணத்தை வகுத்துள்ளார்.

அதாவது, 'எந்த ஒரு மின்னஞ்சலும் ஐந்து கேள்விகளுக்குப் பதில் அளிக்க வேண்டும்' என்பதுதான் கவாஸாகி சொல்லும் இலக்கணம். அந்த ஐந்து கேள்விகளும் இவைதான்.




1. நீங்கள் யார்?
2. உங்களுக்கு என்ன வேண்டும்?
3. நீங்கள் ஏன் என்னைக் கேட்கிறீர்கள்?
4. நான் ஏன் நீங்கள் கேட்பதைச் செய்ய வேண்டும்?
5. அடுத்ததாக என்ன?

ஒருவர் அனுப்பும் மின்னஞ்சல், இந்த ஐந்து கேள்விகளுக்கும் பதில் அளிக்கும் வகையில் இருந்தால், அந்த மின்னஞ்சலானது, பதில் அளிக்கப்படுவதற்கான அனைத்துச் சாத்தியங்களையும் கொண்டிருப்பதாக கவாஸாகி கூறுகிறார். ஒரு புத்திசாலித்தனமான மனிதர், தனக்கு வரும் மின்னஞ்சலுக்குப் பதில் அளிக்கலாமா, வேண்டாமா எனத் தீர்மானிக்க இவை போதுமானவை என்கிறார் அவர்.

கவாஸாகி சாதாரணமானவர் அல்லர். முதலீட்டாளராக இருக்கும் அவரது ஆதரவை நாடி ஆயிரக் கணக்கிலான மின்னஞ்சல்கள் அவருக்கு வருகின்றன. அவற்றுக்குப் பதில் அளிக்கும் அனுபவத்தில்தான் இந்த மின்னஞ்சல் இலக்கணத்தை அவர் உருவாக்கி இருக்கிறார். எனவே, அவர் சொல்வதை நாம் தாராளமாக ஏற்றுக்கொள்ளலாம் என்கின்றனர் இணையத்துறை வல்லுநர்கள். நாமும் இனி மின்னஞ்சல்களை அனுப்பும் போது இவற்றைக் கடைப்பிடித்துத்தான் பார்ப்போமே!

இங்கே மடிக்கவும்




# பொதுத் தகவல் தொழில்நுட்பம் General Information Technology GIT

**கணினி** 'கணினி' என்பது மின்னணுவியல் கருவி ஆகும். அது பயனாளர் தரும் உள்ளீட்டை (Input) வாங்கி, செயற்றிட்டத்தை (Process) நிறைவேற்றி, பயனாளருக்கு வெளியீட்டைத் (Output) தருகின்றது.

## கணினியின் அடிப்படைச் செயற்பாடுகளுக்குரிய சில பாகங்கள்

### உள்ளீட்டுக் கருவிகள் (Input Devices)


தொடுதிரை (Touchscreen)


எண்பலகை (Numeric Keyboard)



விசைப்பலகை (Keyboard)


நகலாக்கி (Scanner)



சுட்டி (Mouse)


ஒலிவாங்கி (Mic)

### செயற்பாடு (Process)


மையச் செயலகம் (Central Processing Unit- CPU) (மையச் செயலகம்: பல்வேறு கருவிகளின் தொகுப்பாக இருக்கும்)

### வெளியீட்டுக் கருவிகள் (Output Devices)


ஒலி வெளியிடும் கருவிகள் (Speakers)



அச்சுக் கருவி (Printer)


திரை (Monitor)

'GIT' பாடநெறி தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13



# மடிக்கணினிகளில் ஏற்படும் அதிக வெப்பத்தைத் தடுக்க என்ன செய்யலாம்...?











கணினியில் ஏற்படும் வெப்பத்தைக் குறைக்க அதில் விசிறிகளை வைத்திருப்பார்கள். அதுபோல Laptop இல் (மடிக்கணினி) ஏற்படும் வெப்பத்தைக் குறைக்கவும் காற்றுப் பரிமாற்றம் நடைபெறவும் அதன் அடிப்பகுதியில் சிறிய துளைகள் இருக்கும்.

எனினும், நாம் Laptop களை உரிய வகையில் பயன்படுத்தாமல் இருந்தால், அத்துளைகள் அடைக்கப்பட்டுவிடுவதால், மிகுதியான வெப்பம் Laptop இலேயே தங்கிவிடுகிறது. இதனால், விரைவாக Laptop சூடேறுகிறது. இவ்வாறு சூடேறுவதால் ஏற்படும் வெப்பத்தை எவ்வாறு குறைப்பது என்பது பற்றியும் வெப்பம் அதிகளவு ஏற்படாமல் தடுக்கும் சில வழிமுறைகள் பற்றியும் பார்ப்போம்.

Laptop களில் அதிக வெப்பத்தை ஏற்படுத்தும் முதற்காரணி அவற்றின் பற்றரிகள்தான். முதலில் இந்த பற்றரிகள் தரமானவையா? எனப் பரிசோதித்தறிவது முக்கியம். தரமற்ற பற்றரிகளால் அதிக வெப்பம் ஏற்படும். இது தவிர, கணினியில் உள்ள இலத்திரனியல் பகுதிகளாலும் வெப்பம் ஏற்படுகின்றது. இவை அனைத்தும் Laptop தனது இயக்கத்தை ஆரம்பித்தவுடனேயே வெப்பத்தை வெளியிட ஆரம்பித்துவிடுகின்றன. அதனால், தொடர்ச்சியான பயன்பாட்டின்போது, அரை மணிநேரத்திற்கு Laptop ஐ நிறுத்தி-ஓய்வில் வைக்குமாறு ஆய்வாளர்கள் அறிவுறுத்துகின்றனர்.

இயங்கும் வேகம் அதிகமாக இருக்க வேண்டும் என்பதற்காக, Laptop களில் அதிக திறனுள்ள இலத்திரனியல் பாகங்கள், விரைவாக இயங்கக்கூடிய Operating System ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இவற்றின் வேக அதிகரிப்பாலும் வெப்பம் கூடுதலாக வெளியிடப்படுகிறது. இந்த வெப்பத்தை வெளியேற்ற Laptop இனுள் விசிறிகள் மற்றும் Heat Sink தகடுகள் என்பனவற்றைப் பொருத்துகின்றனர். எனினும், இவற்றினால் போதிய அளவு வெப்பத்தை வெளியேற்ற முடியாத சூழ்நிலையே உள்ளது. அத்தோடு இவற்றில் பொருத்தப்படும் விசிறிகளின் வேகமும் நாளடைவில் குறைந்துவிடுகின்றது. இதனால், வெப்பம் அதிகளவில் ஏற்படுகிறது.


Laptop அதிகம் வெப்பமடைவதனால், முதலில் பாதிக்கப்படுவது அதன் Hardware தான். Hardware பிரச்சினை ஏற்படாமல் இருக்க, முதலில் வெப்பத்தைக் குறைக்கவும் Laptop ஐக் குளிர்விக்கவும் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். Laptop ஐத் திறந்து அதில் பொருத்தப்பட்டிருக்கும் விசிறிகள் சரியாக இயங்குகின்றனவா எனப் பரிசோதிக்க வேண்டும். விசிறிகள் வேகம் குறைந்தாலோ அல்லது சுற்றாமல் இருந்தாலோ அவற்றை சரி செய்ய வேண்டும்.

அத்துடன், வெப்பம் வெளியேறுவதற்கு அமைக்கப்பட்டிருக்கும் காற்றுத் துளைகளை அடிக்கடி கவனிக்க வேண்டும். இதில் தூசிகள் ஏதேனும் படிந்திருக்கிறதா? என்பதைச் சோதனை செய்து சுத்தம் செய்ய வேண்டும். காற்றுத்துளைகளில் அடைப்பு ஏற்பட்டிருந்தாலும் வெப்பம் வெளியேறாமல் இருக்கும்.

புதிய Laptop எனில், அந்த நிறுவனங்களின் Service Center களில் கொடுத்து பரிசோதிக்கலாம். வீட்டிலேயே பரிசோதித்துக்கொள்ள நீங்கள் நினைத்தால், அதற்கென்றுள்ள மென்பொருள்களைப் பயன்படுத்த வேண்டும். Bios சோதனை செய்வதனூடாகவும் வெப்பம் அதிகமாக உருவாகிறதா என்பதைக் கண்டறிய முடியும். இதற்கு Bios Settings ஐ மாற்றி அமைக்க, உங்கள் Laptop நிறுவனத்தின் இணையத்தளத்திற்குச் சென்று, அவர்கள் கொடுத்திருக்கும் வழிமுறைகளைப் பின்பற்றி Bios Settings ஐ மாற்றி அமைக்கலாம்.

மேலும், வெப்பம் மிகுதியான பகுதிகளில் Laptop ஐப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். குறிப்பாக ரேடியேட்டர், கார் என்ஜின், காற்றோட்டம் இல்லாத சிறிய அறைகள், வெட்டவெளியில் சூரியஒளி படும் இடங்கள் ஆகிய இடங்களில் Laptop பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். மெத்தைகள், தலையணை, கால்களின் மேல் வைத்து இயக்குவது என்பனவற்றை முற்றிலும் தவிர்க்க வேண்டும். கால்களின் மேல் வைத்து இயக்குவதால், உடலுக்கும் கேடு ஏற்படும். மெத்தை விரிப்புகள், தலையணை போன்றவற்றின் மேல் வைத்து Laptop களை இயக்குவதால், வெப்பம் வெளியேறும் வழிகள் அடைத்துக்கொள்ளும். இதனால், வெப்பம் அதிகமாகும்.

எனவே, Laptop களில் வெப்பம் அதிகரிப்பதைத் தவிர்க்க, இதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ள தாங்கிகளைப் (stands) பயன்படுத்தலாம். இத்தகைய நடைமுறைகளை நாம் மேற்கொண்டால், Laptop இல் அதிக வெப்பம் ஏற்படாமல் தடுக்கப்படுவதோடு, அவற்றில் ஏற்படும் பிரச்சினைகளையும் தடுக்க முடியும். இதன்மூலம் Laptop களின் ஆயுளையும் அதிகரிக்கலாம்.





Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வெகுசன ஊடகமும் ஆரோக்கியமான தொடர்பாடலுக்கான வழிமுறைகளும்

ஊடக பாடநெறி 56

வெகுசன ஊடக தொடர்பு நிலையங்களினால் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் என்பது சமூகத்தில் உணரப்படுகின்ற, பலராலும் விமர்சனத்திற்கு உட்படுத்தப்படுகின்ற விடயமாக காணப்படுகின்றது. ஊடக அறிவு என்ற எண்ணக்கரு பரவலாக்கத்தின் முக்கியத்துவமும் இப்பிண்ணனியை அடிப்படையாகக்கொண்டே உணர்த்தப்படுகின்றது. வெகுசன ஊடகங்கள், ஊடகப் பணியாளர்கள், பின்வரும் வழிமுறைகளைக் கையாள்கின்றபோது, அவற்றின்மூலம் சமூகத்தில் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் இழிவளவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



* சமுதாயப் பொறுப்புடன் செய்திகளை அறிக்கையிடலும் முன்வைத்தலும்.
* துல்லியம், நம்பகத்தன்மை, நடுநிலமை, தெளிவு என்ற செய்தியின் அடிப்படை இயல்புகளை முதன்மைப்படுத்தல்.
* நன்முறையான தன்மையில் தெரிவித்தல் அல்லது அறிக்கையிடல்.
* முரண்நிலைகள், வன்முறைகளை அதிகரிக்கத் தூண்டாத வகையில் அறிக்கையிடலும், முன்வைத்தலும்.
* ஊடக விழுமியங்கள், ஒழுக்க நெறிகளை அடிப்படையாகக் கொண்டு தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.




* பொதுநல மேம்பாட்டை அடிப்படை எண்ணக்கருவாகக் கொண்டு ஊடக நிறுவனங்கள் செயற்படுதல்.
* சுதேச பயன்பாட்டு விழுமியங்கள் மீறப்படாத வகையில் சமூகப் பொறுப்புணர்வுடன் செய்திகளை வெளிக்கொணர்தல்.
* ஜனநாயக அம்சங்களுக்கு மதிப்பளித்து அறிக்கையிடுதல்.

நேர்மயமான சிந்தனையுடன் அறிக்கையிடலும் முன்வைத்தலும் செய்தியை அறிக்கையிடுகின்றபோது, சமூக நிலைப்பட்ட நோக்கு ஊடகப் பணியாளரிடம் உணர்வுபூர்வமான வகையில் கட்டியெழுப்பப்பட வேண்டும். யுனெஸ்கோ நிபுணர் Paul De Maeseneer செய்தியின் நம்பகத்தன்மையை சமூக நிலைப்பட்ட நோக்கில் அறிக்கையிடப்பட வேண்டும் என்பதை பின்வரும் எளிய சமன்பாடு மூலம் முன்வைப்பதை அவதானிக்க முடிகின்றது.




துல்லியம்+நடுநிலைத்தன்மை+தெளிவான தன்மை = நம்பகத்தன்மை


(தொடரும்)

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்,**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.


# தளிர்கரம்




உருவை அமைக்க.



புள்ளிகளை இணைத்து உருவைக் காண்க.



எண்ணிக்கையைக் குறிப்பிடுக.



நிறந்தீட்டுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் அம்மா-மகன்-மகள் ஆகியோருக்கு இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**

**පුතා:** **අම්මේ! ඔයා කොහේද?**
அம்மே! ஒயா கொஹேத?
**மகன்:** **அம்மா! நீங்கள் எங்கே?**

**අම්මා:** **ආ.. පුතා ආවද? පොත් ගත්තද?**
ஆ... புதா ஆவத? பொத் கத்தத?
**அம்மா:** **ஆ... மகன் வந்துவிட்டீரா? புத்தகம் வாங்கினீரா?**

**පුතා:** **ඔව් අම්මේ, හොඳ හොඳ පොත් හුඟක් තිබුණා.**
ஒவ் அம்மே, ஹொந்த ஹொந்த பொத் ஹுங்கக் திபுனா.
**மகன்:** **ஆம் அம்மா, நல்ல நல்ல புத்தகங்கள் நிறைய இருந்தன.**

**අම්මා:** **පුතා ගත්තේ මොනවද?**
புதா க்த்தே மொனவத?
**அம்மா:** **மகன் என்ன வாங்கினீர்?**

**පුතා:** **මේ තියෙන්නේ, රචනා පොතයි සිංහල-දෙමළ පොතයි.**
மே தியென்னே, ரச்சனா பொதய் சிங்கள-தெமள பொதய்.
**மகன்:** **இதோ இருக்கின்றன, கட்டுரைப் புத்தகமும் சிங்கள-தமிழ் புத்தகமும்.**

**පොත් ඔක්කොම ලාභයි අම්මේ.**
பொத் ஒக்கொம லாபய் அம்மே.
**எல்லாப் புத்தகங்களும் இலாபம் அம்மா.**

**දුව:** **අයියේ! මට මොනවද ගෙනාවේ?**
அய்யே! மட்ட மொனவத கெனாவே?
**மகள்:** **அண்ணா! எனக்கு என்ன கொண்டு வந்தாய்?**

**පුතා:** **මම නංගිටත් රචනා පොතක් ගෙනාවා.**
மம நங்கிடத் ரச்சனா பொதக் கெனாவா.
**மகன்:** **நான் தங்கைக்கும் கட்டுரைப் புத்தகம் ஒன்று கொண்டு வந்தேன்.**

**දුව:** **කෝ බලන්න අයියේ.**
கோ பலன்ன அய்யே.
**மகள்:** **எங்கே பார்ப்போம் அண்ணா.**

**පුතා:** **මෙන්න නංගි.**
மென்ன நங்கி.
**மகள்:** **இந்தாருங்கள் தங்கச்சி.**

**දුව:** **ආනේ.. හොඳ පොතක්.**
ஆனே... ஹொந்த பொதக்.
**மகள்:** **ஆ... நல்ல புத்தகம் ஒன்று.**

**පුතා:** **අම්මේ! මම තව කතන්දර පොතකුත් ගත්තා. මෙන්න ඉතිරි සල්ලි.**
அம்மே! மம தவ கதன்தர பொதகுத் கத்தா. மென்ன இதிரி சல்லி.
**மகன்:** **அம்மா! நான் இன்னுமொரு கதைப் புத்தகமும் வாங்கினேன். இதோ மீதிப்பணம்.**



## பயிற்சி

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .................... **හුඟක් තිබුණා.**
2. **මට** .................... **ගෙනාවේ?**
3. .................... **පොතකුත් ගත්තා.**




இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற வினா வாக்கியங்கள், உடன்பாடு வாக்கியங்கள் மற்றும் எதிர்மறை வாக்கியங்கள் ஆகிய மூன்றையும் மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நீ புதிய ஒரு பேனா வாங்கினாயா? (வினா)
Did you buy a new pen? (Interrogative)

(ஆ) ஆம், நான் புதிய ஒரு பேனா வாங்கினேன். (உடன்பாடு)
Yes, I bought a new pen. (Affirmative)

(இ) இல்லை, நான் புதிய ஒரு பேனா வாங்கவில்லை. (எதிர்மறை)
No, I did not buy a new pen. (Negative)

| | |
|---|---|
| ✱ Did you buy?<br>நீ வாங்கினாயா? | ✱ Yes, I bought<br>ஆம், நான் வாங்கினேன். |

✱ No, I didn't buy.
இல்லை, நான் வாங்கவில்லை.

(ஈ) நீ முகாமையாளரைச் சந்தித்தாயா? (வினா)
Did you meet the manager? (Interrogative)

(உ) ஆம், நான் முகாமையாளரைச் சந்தித்தேன். (உடன்பாடு)
Yes, I met the manager. (Affirmative)

(ஊ) இல்லை, நான் முகாமையாளரைச் சந்திக்கவில்லை. (எதிர்மறை)
No, I did not meet the manager. (Negative)

| | |
|---|---|
| ✱ Did you meet?<br>நீ சந்தித்தாயா? | ✱ Yes, I met.<br>ஆம், நான் சந்தித்தேன். |

✱ இல்லை, நான் சந்திக்கவில்லை.
No, I didn't meet.

(எ) அவன் உண்மையைக் கூறினானா? (வினா)
Did he tell the truth? (Interrogative)

(ஏ) ஆம், அவன் உண்மையைக் கூறினான். (உடன்பாடு)
Yes, he told the truth. (Affirmative)

(ஐ) இல்லை, அவன் உண்மையைக் கூறவில்லை. (எதிர்மறை)
No, he did not tell the truth. (Negative)

| | |
|---|---|
| ✱ Did he tell?<br>அவன் கூறினானா? | ✱ Yes, he told.<br>ஆம், அவன் கூறினான். |

✱ No, he didn't tell.
இல்லை, அவன் கூறவில்லை.

(அ) அவள் பணத்தைச் செலுத்தினாளா? (வினா)
Did she pay the money? (Interrogative)

(ஆ) ஆம், அவள் பணத்தைச் செலுத்தினாள். (உடன்பாடு)
Yes, she paid the money. (Affirmative)

(இ) இல்லை, அவள் பணத்தைச் செலுத்தவில்லை. (எதிர்மறை)
No, she did not pay the money. (Negative)

| | |
|---|---|
| ✱ Did she pay?<br>அவள் செலுத்தினாளா? | ✱ Yes, she paid.<br>ஆம், அவள் செலுத்தினாள். |

✱ No, she didn't pay.
இல்லை, அவள் செலுத்தவில்லை.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5,500 ஆண்டுகளாக வெளிப்படாத மர்மம்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## பிரித்தானிய அருங்காட்சியகத்தில்...

இந்த இளைஞனின் மம்மியானது, உலகில் மிகவும் பிரசித்தி பெற்றதாக உள்ளது. 1901 ஆம் ஆண்டு இந்த மம்மி பிரித்தானிய அருங்காட்சியகத்திற்குக் கொண்டு வரப்பட்டதிலிருந்து, அதில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதற்காக, அந்த மம்மியை எந்தவோர் அசைவுகளுக்கும் உட்படுத்தாது அதே இடத்தில் வைத்துவிட்டனர்.



பின்னால் இருந்து மேற்கொள்ளப்பட்ட கத்திக்குத்துக் காரணமாக, பின் தோள்பகுதியின் எலும்புகள் முறிவடைந்துள்ளதைக் காணலாம்.





உடற்கூற்று பரிசோதனைக்காக சிறிய ஸ்கேனரொன்றினூடாக ஸ்கேன் செய்யப்பட்டபோது...

அண்மையில்தான் இன்டர் எக்டிவ் நிறுவனத்தினால் முன்னேற்றப்பட்ட மென்பொருளொன்றைப் பயன்படுத்தி, ஸ்கேன் இயந்திரத்தினூடாக இந்த மம்மியின் முப்பரிமாண பிரதிபலிப்புகள் பெறப்பட்டன. அதன்போது குறித்த மம்மியின் உடலின் ஒவ்வொரு பாகமும் விசாலப்படுத்தப் பட்டு கணினி முறையினூடாக விசேடமாக ஆய்வுக்குட்படுத் தப்பட்டது.

இந்த மம்மி கடந்த நூறு ஆண்டு களுக்கும் மேலாக பிரித்தானிய அருங்காட்சியகத் தில் இருந்தபோதும் இந்த மம்மியின் அடிப்பாகத்தை யேனும் அருங்காட்சியக நிர்வாகிகள் கண்டதில்லை யென்று கலாநிதி டெனியல் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், கணினி பிரதிமையின்படி, மம்மியின் உள்ளக அவயவங்களைத் துல்லியமாக ஆய்வுசெய்ய முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொலையாளி இந்த இளைஞனைத் தேடி வருவதற்கு முன்னர், இறுதி சில மணித்தியாலங்களை இந்த இளைஞன் எவ்வாறு கழித்தான் என்பதனை அறியவும் ஆய்வுகள் தொடரப்படுகின்றன. அத்துடன், ஜின்ஜர் இறுதியாக உட்கொண்ட உணவின் விபரங்கள் உட்பட, மேலும் பல விபரங்களை பிரித்தானிய அருங்காட்சியகக் குழுவினரால் அறிந்துகொள்ள முடியும் என்று கலாநிதி டெனியல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"சி.டி. ஸ்கேன்மூலம் இந்த இளைஞனின் எலும்புக்கூட்டுத் தொகுதியையும் தெளிவாக ஆராய்வதற்கு கணினி எமக்கு இடமளித்தது. இதற்கு முன்பு இவ்வாறான துல்லியமான ஆய்வுக்கு எமக்கு வேறு வழிகள் இருக்கவில்லை" என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



## எகிப்தின் கற்காலம்

இந்த குறிப்பிட்ட மம்மியானது, எகிப்தின் கற்காலத்திற்கு அல்லது அதற்கு முற்பட்ட காலப்பகுதிக்கு உரியதாகும். எகிப்தின் பூட்டோ நகரிலிருந்தே இதனை அகழ்ந்தெடுத்துள்ளனர்.

எகிப்தின் கற்காலத்திற்குரிய தொன்மையான புராதனச் சின்னங்கள் முதன்முதலில் 'நகதா' என்றழைக்கப்படும் தென்பகுதி எகிப்திய நகரொன்றிலிருந்தே அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவர்களின் கல்லறைகள் இந்தப் பகுதியின் குடியிருப்புக்கு அருகாமையில் உள்ள பாலைவனப்பகுதியில் அமைந்துள்ளன. அங்கு வடக்கிலும் தெற்கிலும் மாறுபட்ட இரு கலாசாரங்கள் இருந்ததற்கான சான்றுகள் அகழ்வாராய்ச்சியின்போது கண்டுபிடிக்கப்பட்டன. வடக்கின் நகரம் பூட்டோ ஆகும். அந்தக் காலத்தில் சிறிய குழிகளிலேயே சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன. அதாவது, சுருண்டு படுத்திருப்பது போன்று சடலங்கள் வைக்கப்பட்டன.

பிற்காலத்தில் சடலங்களின் தலை மற்றும் கை-கால்கள் துணிகளால் கட்டப்பட்டு, பாய்களில் சுற்றப்பட்டுப் புதைக்கப்பட்டன. அதனுடன் ஆபரணங்கள், பீங்கான்கள் போன்ற பொருட்கள் புதைக்கப்பட்டமையானது, அந்தக் காலப்பகுதி தொடர்பான விடயங்களைக் கண்டறிய பேருதவியாக அமைந்துள்ளன எனலாம்.

(இ)


வெல்லுங்கள்

விஜய் உடன் TOP NEWS வழங்கும் வாரம் ஒரு iPod...




பிரதி புதன்கிழமைகளில் வெளிவரும் 'விஜய்' பத்திரிகையை நன்கு வாசித்து அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் 'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' பத்திரிகையில் கண்டுபிடித்து தபாலிடுங்கள்.

வாராந்தம் iPod இனை வெல்வதற்கான கேள்வியினை அறிந்துகொள்ள அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் DIALOG தொலைபேசியில் செயற்படுத்திக் கொள்ளுங்கள்.

'Top News' SMS ஊடாகக் கேட்கப்படும் கேள்விக்கான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலட்டையில் ஒட்டி 30.10.2013 ஆம் திகதிக்குள் அனுப்புதல் வேண்டும். கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்கு தெரிவுசெய்யப்படும்.

சரியான விடையை அனுப்புவோரில் அதிர்ஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு வாரம் ஒரு iPod பரிசாக வழங்கப்படும்.




02.10.2013 'Top News' கேள்விக்கான விடை:
144 -216 கலோரி

iPod பரிசை பெறுபவர் :
வ.மதுமேகலன்,
430, ஆனந்தபுரம் கிழக்கு,
கிளிநொச்சி.

விஜய் – TOP NEWS
இவ்வார கூப்பன் (23.10.2013)

விடை: ......................................
பெயர்: ......................................
வீட்டு முகவரி: ......................................
......................................
பாடசாலை முகவரி: ......................................
......................................
வயது: ......................................
தொ.பே.இல: ......................................

அனுப்ப வேண்டிய முகவரி:
iPod பரிசுப் போட்டி,
'விஜய்'
த.பெ.இல: 2037,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியாக் கண்டத்தில் முதன்முதலில் காலடி வைத்தவர் கெப்டன் ஜேம்ஸ் குக் என்பவராவார். ஆனால், 16 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே மனிதன் அவுஸ்திரேலியாவில் தடம் பதித்த விபரம் தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையில், அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கடற்கரையில் 28 வயதிலிருந்து 60 வயது மதிக்கத்தக்க வெள்ளையரான ஆண் ஒருவரின் எலும்புக்கூட்டை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இது சம்பந்தமான ஆராய்ச்சி தொடர்வதாக அவுஸ்திரேலியாவின் தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் ஸ்டீவர்ட் ஃபலோன் என்பவர் தெரிவித்துள்ளார்.





எம்.எஸ்.எப்.ஹஸ்னா,
இர/அல்-அக்ஷா மு.ம.வித்.,
எஹலியகொடை.

# நாடுகளும் அவற்றின் நாடாளுமன்ற சபைகளும்

**1. அமெரிக்கா - கொங்கிரஸ்**
- i. மக்கள் பிரதிநிதிகள் சபை (கீழவை)
- ii. செனட் சபை (மேலவை)

**2. பிரித்தானியா - நாடாளுமன்றம்**
- i. பொதுமக்கள் சபை (கீழவை)
- ii. பிரபுக்கள் சபை (மேலவை)

**3. பிரான்ஸ் - நாடாளுமன்றம்**
- i. தேசிய சபை (கீழவை)
- ii. செனட் சபை (மேலவை)

**4. இந்தியா - நாடாளுமன்றம்**
- i. லோக் சபா (கீழவை)
- ii. ராஜ்ய சபா (மேலவை)

**5. சுவிற்சர்லாந்து - கூட்டாட்சி சட்ட மன்றம்**
- i தேசிய சபை (கீழவை)
- ii மாநிலங்களின் சபை (மேலவை)

சப்ரானா நிஸாமுதீன்,
அட்டுலுகம, பண்டாரகம.



# முயல்

வெண்ணிலவிலுள்ள முயல்
வெண்ணிறமான முயல்!

கண்ணைக் கவரும் முயல்
கள்ளம் கபடமற்ற முயல்!

பொந்தில் வசிக்கும் முயல்
பொன்னான செல்ல முயல்!

எம்.சகிரா றஹ்மத்,
அல்-அகில் மு.ம.வித்.,
கொட்டியாகும்புர.

# அரிய வாய்ப்பு





ஒருநாள் ஒரு வயோதிபர் புகைவண்டியைப் பிடிக்க வேண்டும் என்று வேகமாகச் சென்று கொண்டிருந்தார். அவ்வேளை அவருடைய பையிலிருந்த பணப்பை தவறிக் கீழே விழுந்துவிட்டது. ஆனால், அவர் அதைக் கவனிக்கவில்லை.

நடந்த யாவற்றையும் அவ்வழியே வந்த சிறுவன் ஒருவன் கண்டுவிட்டான். அந்த பணப்பையை அந்த பெரியவரிடம் எப்படியாவது கொடுத்துவிட வேண்டும் என எண்ணிய சிறுவன் அதை எடுத்துக்கொண்டு விரைந்து சென்றான். பெரியவரை சந்தித்து, ''ஐயா உங்களுடைய பணப்பை கீழே விழுந்து விட்டது பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றான்.

பணப்பையைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்த அவர், அதில் நிறையப் பணம் உள்ளது என்பதை உணர்ந்து அப்பையைப் பெற்றுக்கொண்டார். அவர் சிறுவனிடம் ''தம்பி! இந்த பணம் மீண்டும் எனக்குக் கிடைக்கும் நல்லவாய்ப்பு இருந்துள்ளது. அதனால்தான் உன் கையில் இது கிடைத்துள்ளது. எனவே, என் அன்புப்பரிசாக இந்த நூறு ரூபாவைப் பெற்றுக்கொள்'' என்றார்.


''ஐயா இது எனக்குக் கிடைத்த ஒரு நல்லவாய்ப்பு நான் ஒரு மாணவன். எனது குறிக்கோள் நாள்தோறும் யாரேனும் ஒருவருக்கு ஏதேனும் ஓர் உதவியாவது செய்ய வேண்டும் என்பதாகும். இன்று எனக்கு உங்களுக்கு உதவி செய்யும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. அதுவே எனக்குப் போதும் பரிசு எதுவும் வேண்டாம்'' என்று கூறிச் சென்றான்.



எஸ்.நவிநவாஸ்,
களுத்துறை ஆண்கள் மு.கல்.,
களுத்துறை.

# யானை

உலகில் பாலூட்டி விலங்குகளில் மிகப் பெரியது யானையாகும். யானைகளை ஆசிய, ஆபிரிக்க யானைகள் என இருவகைப்படுத்த முடியும். யானைகள் குழுக்களாக வசிப்பதை விரும்புவதுடன், தாவரங்களின் இலைகள், தழைகள், மூங்கில்கள், பழங்கள் போன்றவற்றை விரும்பி உண்கின்றன. சில யானைகள் தந்தங்களைக் கொண்டிருப்பதுடன், ஒரு முறைக்கு ஒரு குட்டியையே ஈனுகின்றன. குட்டி யானை ஐந்து வயது வரை தாயுடனேயே வளர்கின்றது. இவை 45-60 வருடங்கள் ஆயுட்காலமுடையவை. இலங்கையில் மிக விசாலமான யானைகள் சரணாலயம் பின்னவலையில் அமைக்கப்பட்டு, அங்கு ஏராளமான யானைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



பாபு.பவித்ரா,
க/புனித அந்தோனியார் மகளிர்
கல்லூரி, கண்டி.

## ஐக்கிய நாடுகள் சபையின் ஆறு தாபனங்கள்

- ★ பொதுச்சபை
- ★ பாதுகாப்புச்சபை
- ★ பொருளாதார சமூகசபை
- ★ நம்பிக்கைப் பொறுப்புச்சபை
- ★ சர்வதேச நீதிமன்றம்
- ★ பொதுச்செயலகம்

எச்.எஸ்.நுசைரா,
இர/அல்-அக்ஷா ம.ம.வித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தயாரிப்பு - ஸாரா


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.10.30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 440
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## எத்தனை உள்ளன? — 1



## பொருத்தமான படத்துடன் இணைக்க — 3




## வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 2



## ஒத்தகருத்துச் சொல்லில் கோடிடுக — 5

1. ஒளி - வெளிச்சம்/மறை/சத்தம்
2. ஆகாயம் - விசும்பு/ உலகம்/ முகில்
3. வெட்கம் - விநோதம்/ நாணம்/ கேண்மை
4. குதிரை - அரி/பரி/கரி
5. நோக்கம் - திருப்புமுனை/ குறிப்பு/குறிக்கோள்

## காலங்களுக்கேற்ப இடைவெளிகளை நிரப்புக — 4


| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| 1. ............................ | படிக்கின்றான் | ............................ |
| 2. நீராடினர் | ............................ | ............................ |
| 3. ............................ | ............................ | வரைவாள் |
| 4. பறந்தது | ............................ | ............................ |

## அறிவுக்கு விருந்து - 437 விடைகள்

போட்டி: 01



போட்டி: 02




போட்டி: 03



போட்டி: 04

1. 80 ஆம் ஆண்டு நிறைவு விழா - அமுத விழா
2. முச்சுடர்கள் - சூரியன், சந்திரன், அக்கினி
3. மர வேலை செய்பவன் - தச்சன்
4. கடலும் கடல் சார்ந்த இடமும் - நெய்தல்
5. 'ஒலி' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லொன்று - சத்தம்

போட்டி: 05

1. புற்று
2. கள்வன்
3. பூஞ்சணம்
4. தண்டவாளம்
5. சுண்ணாம்பு
6. ஒத்துழைப்பு

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 437 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
திி.கம்சாயினி, ஆரையம்பதி.

போட்டி: 02
சி.நிர்மல், டயகம.

போட்டி: 03
அஃப்கா அஷ்ரப், ரம்புக்பிடிய.


போட்டி: 04
ரிஸ்லா ராயிஸ்டீன், குருநாகல்.

போட்டி: 05
எம்.ரஸ்மி, வெளிமடை.

பாராட்டுப் பெறுவோர்:

- ரா.நிருஷாந், மட்டக்களப்பு.
- ஜே.ஸபூரா, புத்தளம்.
- ஷிம்ரா உஸ்மான், நாங்கள்ள.
- என்.தேனுஜா, யாழ்ப்பாணம்.
- ரா.சதுர்ஷன், மடுல்சீமை.
- ஜே.மன்சூர், கனேவல்பொல.
- எஃப்.ஆகிலா, கிரிங்கதெனிய.
- ஆர்.கெவின்ஸ்ரன், கொழும்பு-13.
- ஷஸா சப்ரான், வேறவத்தை.
- எம்.மனோகரன், ஹட்டன்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல.56



### மேலிருந்து கீழ்

01. 1948 இல் ஆங்கிலேயரிடமிருந்து இலங்கை பெற்றது.
02. (ஓவியம்) தீட்டு என்றும் அர்த்தப்படும்.
03. உடலில் வெள்ளைப் புள்ளிகளை உடைய மான் இனம்.
07. நரி, ஓநாய் போன்றவற்றின் ஒலம் இவ்வாறு அழைக்கப்படும். (தலைகீழ்)
08. வெற்றிலையுடன் சேர்த்து சுவைப்பது.(தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. 'நரகம்' என்பதன் எதிர்ப்பதம்.
04. நிலம்.
05. பழவகை ஒன்று. (குழம்பியுள்ளது)
06. திசை.
07. இறைச்சி. (மாறியுள்ளது)
08. பகுதி. (மாறியுள்ளது)
09. கடலில் எழுவது. (மாறியுள்ளது)

### குறுக்கெழுத்துப் போட்டி இல.55 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 கு | ண் | ட | ல | 2 கே | 3 சி |
| ப் | | | | டு | 4 வ |
| பை | ப் | 5 க | 6 அ | | பெ |
| | | ம | | 7 த | ரு |
| 8 பா | வ | ல | ர் | | மா |
| கு | | ம் | | 9 மா | ன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலைக் காப்பதற்கான விழிப்புணர்வு ஊர்வலம்






கண்டி மாவட்ட தெல்தெனிய பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் ஒழுங்குசெய்த 'சூழலைப் பாதுகாப்போம், டெங்கை ஒழிப்போம், பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம்' என்ற தொனிப்பொருளில் ஹிஜ்ராபுர, அம்பகஹவத்த கிராம மக்களை விழிப்புணர்வூட்டும் ஊர்வலமொன்று அண்மையில் நடைபெற்றது. பெருமளவு ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தின்போது, துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு பதாகைகளும் ஏந்திச் செல்லப்பட்டதுடன், வாத்தியங்கள் இசைக்கப்பட்டு மக்கள் கவனத்தை ஈர்த்தமையும் குறிப்பிடத்தக்கது.



மட்டக்களப்பு கல்லடி-உப்போடையைச் சேர்ந்த மனோகர்-செல்வி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஹருஸ்ராஜ், தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 19.10.2013 அன்று கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கல்லடி-உப்போடை ஸ்ரீ பேச்சியம்பாளின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.



காத்தான்குடி 04, மாம்புள்ளியார் வீதியைச் சேர்ந்த அஜ்வத்-ஹசீகா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா அம்னா, 17.10.2013 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றனர்.(தகவல்: அன்சார்)



மட்டக்களப்பு கல்லடி வேலூரைச் சேர்ந்த ரூபராஜ்-காஞ்சனா தம்பதியரின் செல்வப் புதல்வி உமேசிக்கா, தனது முதலாவது பிறந்தநாளை 07.10.2013 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரைப் பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கல்லடி வேலூர் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் துணையுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: ம.ஹருஸ்ராஜ்)

ஹுரீமலுவ-ரம்புக்கனையைச் சேர்ந்த சூபி-பௌசியா தம்பதியரின் செல்வப் புதல்வி பாத்திமா நுஸ்ஷா, தனது பதின்மூன்றாவது பிறந்தநாளை 29.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பஸ்ரினா)

கட்டுகஹவத்தை, தெவனகலயைச் சேர்ந்த நௌஷாத்-ஹனீமா தம்பதியரின் செல்வப் புதல்வி ஹாஜரா,தனது இரண்டாவது பிறந்தநாளை 27.09.2013 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

## உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...



எல்ப்ரெட் டியூரே
(1471-1528)

எல்ப்ரெட் டியூரே, ஜேர்மன் ஓவியரும் அச்சுருவாக்கக் கலைஞருமாவார். இவர், 1471 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ஜேர்மனியின் Bavaria மாநிலத்தின் நியூரெம்பர்க் நகரில் பிறந்தார். இவரது தந்தையார் அப்பகுதியில் வாழ்ந்த புகழ்பெற்ற பொற்கொல்லராவார். இதனால், தனது தந்தையின் விருப்பத்திற்கமைய, எல்ப்ரெட் டியூரே தனது பாடசாலைக் காலம் முடிந்து பொற்கொல்லத் தொழில் தொடர்பான அடிப்படைகளையும் வரைதலையும் கற்றுக் கொள்ளத் தொடங்கினார். அதற்கமைய, 1486 இல் அப்போது நியூரெம்பர்க்கின் முன்னணி ஓவியரான மைக்கல் வோல்ஜ்மட் என்பவரின்கீழ் இணைந்து வரைதல் தொடர்பாகக் கற்றுக்கொண்டார். அதன் பின்னர் நான்கு வருடங்கள் வெளியிடங்களுக்குச் சென்று பல்வேறு ஓவியர்களின்கீழ் பயிற்சி பெற்றார்.

1494 இல் இத்தாலிக்குப் பயணமான இவர், அங்கிருக்கும் காலத்தில் இத்தாலிய மறுமலர்ச்சிக் கலைஞர்களுடைய கலைநுணுக்கங்களைத் தெரிந்துகொண்டார். இத்தாலியின் வெனிஸ் நகர் சென்று கலையுலகம் தொடர்பில் பல்வேறு நுட்பங்களைக் கற்றுக்கொண்டார். 1495 இல் மீண்டும் நியூரெம்பர்க் நகர் திரும்பி, தமக்குச் சொந்தமான பணிமனையொன்றைத் தொடங்கினார். நீர்ச்சாயம் பயன்படுத்தி இவர் வரைந்துள்ள இயற்கைக் காட்சிகளை சித்தரிக்கும் படங்கள், ஐரோப்பாவிலேயே முன்னோடியானவையாகவும் சிறந்தவையாகவும் புகழ்பெற்றுள்ளன. லொட்டும் அவரது மகள்மாரும், கிறிஸ்துவுக்காகப் புலம்புதல், Feast of the Rosary, வெனிஸ் பெண்ணின் உருவப்படம், இளம் முயல், திருக்குடும்பம், கல்வாரி செல்லும் வழியில், மெடோனாவும் குழந்தையும், நான்கு அப்போஸ்தலர்கள் போன்ற ஓவியங்கள் உட்பட, பல புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்துள்ள இவர், 1528, ஏப்ரல் 6 ஆம் திகதி நியூரெம்பர்க் நகரில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.



இளம் முயல்



லொட்டும் அவரது மகள்மாரும்

-ஜீநு




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு

க.லுஜீவன்,
இந்து தே.கல்., மாத்தளை.





எம்.சப்ரீன்,
தெல்தெனிய மு.வித்., கண்டி.

நஜ்மா அஸ்ரார்,
அல்-ஹம்ரா ம.வித்., தர்கா நகர்.



எம்.அம்ஹரி,
பறகஹதெனிய தேசிய பாட.,
பறகஹதெனிய.





என்.பாத்திமா அஸ்ரா,
பதுரியா ம.கல்., மாவனல்லை.

பி.சுதர்ஷன்,
சென்மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழுவழிக் கற்றல்



குழுவழிக் கற்றல் முறைதான் பிறவழிக் கற்றல் முறைகளைக் காட்டிலும் அதிக அளவில் ஆராய்ச்சி செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் குழுவாக செயற்படும் வாய்ப்புமூலம் வேகமாகவும் செம்மையாகவும் கற்றுக்கொள்ளல், நினைவில் கொள்ளும் திறன் மற்றும் கல்வி பயில்தல் பற்றி நேர் மறையான எண்ணங்களைக் கொண்டுள்ளார்கள் என முடிவுகள் தெரிவிக்கின்றன. மாணவர்களை குழுக்களாக அமைத்து ஒரு செயலை முடிக்குமாறு பணித்தால் மட்டுமே இம்முறை நிகழ்வதில்லை. இம்முறையில் வெற்றி அடைய குறிப்பிட்ட வழிமுறைகள் பல உள்ளன. மாணவர்களும் ஆசிரியர்களும் அவற்றை அறிந்திருத்தல் அவசியம்.

மாணவர்கள் குழுவாக செயற்படும்போது, ஆசிரியர்கள் விடைத்தாள் திருத்தல் உள்ளிட்ட பிற வேலைகளில் ஈடுபடுதல் கூடாது. நன்கு படிக்கும் மாணவர்கள் தொடர்ந்து குழுத்தலைவனாக நியமித்து அவற்றைக் கவனிக்க பணிக்கப்படுதலும் அவர்களுக்கு ஏற்றதல்ல. இன்று பணியிடங்களில் அதிகம் எதிர்பார்க்கப்படும் பிறருடன் இணைந்து செயற்படுதல், கூட்டாக செயற்படுதல் முதலிய குணங்களை வளர்த்துக்கொள்ள வாய்ப்பாக இது அமைகிறது. நிருபர், பதிவுசெய்பவர், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் முதலிய பல்வேறு பாத்திரங்களில் பணி செய்ய குழுவழிக் கற்றல்



வாய்ப்பளிக்கிறது.

குழுவில் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் அவர்களுக்குத் தனித் தனிப் பணிகள் உள்ளன. யாரும் இதில் கலந்துகொள்ளாமல் இருந்து விட முடியாது. ஒரு குழுவின் வெற்றி ஒவ்வொரு தனிநபரின் உழைப்பில்தான் உள்ளது. மாணவர்கள் கல்வி தொடர்பான பணிகளில் சிறுசிறு குழுக்களாக செயற்படுவது அவர்களுக்கும் அவர்களின் குழு நண்பர்களுக்கும் உதவியாக இருக்கிறது.

**தொகுப்பு: றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

### இஸ்லாமிய தகவல்கள்

Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக

* அல் குர்ஆன் வசனங்கள்.
* ஹதீஸ்கள் மற்றும் நற்சிந்தனைகள்.
* துஆக்கள் மற்றும் முக்கிய முஸ்லிம் நிகழ்வுகள்.

என இன்னும் பல்வேறுபட்ட முஸ்லிம் விடயங்களை பெற்றுக் கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்.


REG MUSLIM

என Type செய்து 77000 எனும் இலக்கத்திற்கு அனுப்பவும்.

# கைப்பேசிப் பாவனையால் செவிட்டுத்தன்மை



கைப்பேசியை அதிகளவில் பயன்படுத்துவதால் செவிட்டுத் தன்மை ஏற்படும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள். பொதுவாக, எமது கேட்கும் திறனின் அளவு 70 டெசிபல் முதல் 75 டெசிபல் வரையில் இருக்க வேண்டும். எனினும், அதிகபட்ச உயர்ந்த அளவு 90 டெசிபல் ஒலி அளவுகள் வரை கேட்கும் திறனைக் காது கொண்டுள்ளது.




கைப்பேசிமூலம் நாம் கேட்கும் ஒலியின் அளவு 90-100 டெசிபலாக இருக்கும். இது காதுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய அளவாகும். அதிகபட்சமாக 20 நிமிடங்கள் வரை தொடர்ந்து கைப்பேசியில் பேசலாம். 30 நிமிடங்களுக்கு மேல் அதிகமாக காதிலிருந்து கைப்பேசியை எடுக்காமல் தொடர்ந்து பேசுவதால், காதில் கோளாறுகள் ஏற்படக் கூடும். அத்துடன், கதிர்வீச்சுத் தாக்கமும் ஏற்படுவதால், உடலுக்கு பல்வேறு பாதிப்புகளும் ஏற்படும்.

அதிக அதிர்வலைகளை ஏற்படுத்துகின்ற கைப்பேசியை நாம் காதிலேயே வைத்துப் பேசுவதால் காதில் உள்ள நுண்ணிய நரம்புகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. இதனால், காது கேட்கும் திறன் குறையக்கூடிய வாய்ப்புகள் அதிகம் என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# 'எனது நாடு'

## ஜப்பான் குமமோத்தோ UNESCO அமைப்பின்

## சிறுவர்களுக்கான சித்திரப் போட்டி 2013

ஏற்பாட்டாளர்: குமமோத்தோ UNESCO நிறுவனம் - ஜப்பான்

பங்குபற்றல்: சிறுவர் கலை அரங்கு Child art Studio- இலங்கை

சித்திரத்தின் தொனிப்பொருள்: எனது நாடு- My Country

சிறுவர்கள் வரையும் சித்திரத்தில் பிரதிபலிக்கப்படும் கலாசாரப் பெறுமதி கொண்ட அனுபவங்களை சர்வதேசப் பிரஜைகளுடன் பரிமாறிக் கொள்வது இந்த போட்டியின் நோக்கமாகும்.

சுற்றாடல் (மனிதர் உட்பட) தொடர்பான உணர்வுபூர்வமான புரிந்துணர்வு கொண்ட தீவிரமான அக்கறையை ஏற்படுத்துவதும், எதிர்கால சந்ததியினருக்குக் கையளிக்கப்படும் இந்த ஈடு இணையற்ற நட்புணர்வின் முக்கியத்துவம் குறித்து உத்வேகத்தை ஏற்படுத்துவதும் இப்போட்டியின் தொனிப் பொருளாக அமைகின்றது.

**நீங்கள் வரையும் சித்திரம்:** அழகிய சுற்றாடலில் நானும் எனது நாடும்/எனது நாட்டைப் பற்றி நான் சிந்திக்கும் விதம்/ மேலும் எனது நாட்டைப் பற்றிய கருத்தினை வெளிப்படுத்தும் விதத்திலும் நீங்கள் விரும்பிய தலைப்பில் சித்திரம் வரையலாம்.

**நாம் எதிர்பார்ப்பது:**

* நவீன முறையில் படைப்புத் திறன் மிக்க தீவிர வெளிப்பாட்டுத் தன்மை கலைத்துவ அடிப்படையில் இருத்தல்.
* வழமையான முறையில் இல்லாமல் புதிய சிந்தனைத் திறனுடன் உங்கள் படைப்பினை பூர்த்தி செய்ய முடியும்.

**ஊடகம்:** சித்திரத்தில் எந்தவொரு வரைதல் ஊடகத்தையும் பயன்படுத்தலாம். கொலாஜ் அல்லது எந்தவொரு கிரஃபிக் ஊடகத்தினாலும் சித்திரம் வரையலாம்.

**உங்களது படைப்பின் நீளம், அகலம்:** 38cm X 54cm

**வயதெல்லை:** 4 முதல் 15 வயதுவரை (2013 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்குள்)

**பரிசும் விருதும்:** ஜப்பானின் குமமோத்தோ நிறுவனத்தின் தலைவர் விருது, சான்றிதழ் மற்றும் பதக்கங்கள் வழங்கப்படும்.

**சிறப்பு:** இரண்டாவது இடத்தைப் பெறும் இருவருக்கு பரிசுகள் வழங்கப்படுவதோடு, அதிசிறப்பு விருதுகள் ஒன்பது மற்றும் முப்பத்தியெட்டு பாராட்டு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும். நீங்கள் பெறும் வெற்றிக்கு ஏற்ப அந்த சிறப்பு சித்திரங்கள் ஜப்பானின் குமமோத்தோ UNESCO 2014 கெலண்டரில் சேர்க்கப்படும். அதன் பிரதிகள் உங்களுக்கு வழங்கப்படும்.

### 'எனது நாடு' சிறுவர் சித்திரப்போட்டி - 2013

போட்டியாளர் பெயர்: ..............................

Name in Full: ..............................

(English Capital)

வயது: ..............................

வீட்டு முகவரி: ..............................

..............................

தொலைபேசி இலக்கம்: ..............................

(போட்டி முடிவை அறிவிக்க)

பாடசாலையின் பெயர்: ..............................

பாடசாலை முகவரி: ..............................

மாவட்டம்: ..............................

இந்த படைப்பு மேற்கூறப்பட்ட போட்டியாளரினுடையது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.

..............................

சித்திரப்பாட ஆசிரியர்/ஆசிரியை

.............................. ..............................

அதிபர் திகதி

**இறுதி திகதி:** சித்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத்திகதி 2013 ஒக்டோபர் 25. (ஒக்டோபர் 21 முதல் 25 வரை நேரடியாகவும் சித்திரங்களை ஒப்படைக்க முடியும்) சித்திரத்தில் மடிப்பு ஏற்படாதவகையிலும் பழுதுபடாத வகையிலும் உறையில் இட்டு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கையளிக்க முடியும்.

**சித்திரங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**
(இதில் விரும்பிய முகவரிக்கு அனுப்பலாம்)

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
Child art Studio,
53/7, கிறெகரி வீதி,
கொழும்பு-07

* * *

பணிப்பாளர்,
சிறுவர் கலை அரங்கு,
27/2, குருதெனிய வீதி,
அம்பிட்டிய.


**மேலதிக விபரங்களுக்கு:** 0714820151
(தினமும் மாலை 7 முதல் 10 வரை)

* இந்த சித்திரப் போட்டியில் அதிசிறப்பு விருதைப் பெறும் மாணவ/மாணவியரது பாடசாலைக்கும் விசேட மதிப்பீட்டு சான்றிதழ் வழங்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

ஊடக அனுசரணை: விஜய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானிகள் அற்ற பயணிகள் போக்குவரத்து விமானம்




வாகனம் ஒன்றைப் பற்றி பேசும்போது அதனைச் செலுத்தக்கூடிய அனுபவம் வாய்ந்த சாரதிகளின் தேவைப்பாடு பற்றியும் பேசப்படும். எனினும், தற்போது செலுத்துனர் உதவியின்றி தானாகவே (Automatic) இயங்கக்கூடிய மோட்டார் வாகனங்கள் உலகில் உள்ளன. இவற்றுக்குத் தேவையான தரவுகளை கொடுத்தவுடன் குறிப்பிட்ட வீதிகளில் வீதிச்சட்டதிட்டங்களை மதித்து செல்லவேண்டிய இடத்தினை இவை சென்றடைந்துவிடும். இவ்வாறான தானியங்கிக் கட்டுப்பாட்டு முறை விமானங்களில் காணப்படுகின்றது. இதனை Autopilot என்று கூறுவர். வழங்கப்படும் தரவுகளுக்கு ஏற்ப செயலாற்றி விமானத்தினை தானியக்கமாக செலுத்தப்படுதலே இங்கு நிகழ்கின்றது. விமானி ஒருவர் விமானத்தில் இருந்தபோதிலும், இந்த தானியக்க முறை அவருக்கும் இலகுவானதாகவே இருக்கின்றது.

ஆரம்பத்தில் விமானத்தின் கட்டுப்பாடு மற்றும் அதன் சிறகுகள் தொடர்பான விடயங்கள் கேபிள் மூலம் பொறியியல் (Mechanical) முறையில் தானியங்கியாக இயக்கப்பட்டது. இதனை Fly-By-Wire என்பர். அதன்பின்னர் இதனை கணினி இயந்திரத்தைக்கொண்டு இலத்திரனியல் மயப்படுத்தினர். தற்போது இம்முறையை முற்று முழுதாக டிஜிட்டல் முறையாக்கியுள்ளனர்.

இதனூடாக, இந்த Autopilot முறை மிகவும் இலகுவானதாக மாறி விமானிகளுக்கு பல வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. தற்போது அமெரிக்க விமானப்படையில் உள்ள தாக்குதல் விமானங்களில் விமானிகள் இல்லை. அவற்றை தரையில் உள்ள கட்டுப்பாட்டு அறைகளே கட்டுப்படுத்துகின்றன. எதிர்வரும் காலங்களில் போயிங் மற்றும் எயார்பஸ் பயணிகள் போக்குவரத்து விமானங்களில் இந்த முறையினைப் பயன்படுத்திக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான ஆய்வுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

## NASA 802

அமெரிக்காவின் நாஸா நிறுவனத்தினால் 1972 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட இந்த NASA 802 விமானம், உலகின் முதலாவது FLY-BY-Wire தொழில்நுட்பத்தைக்கொண்ட விமானமாகக் கருதப்படுகின்றது. இயந்திரப் பொறிமுறையினைக் கைவிட்டு இலத்திரனியல் முறையில் விமானம் ஒன்றை கட்டுப்படுத்திய முதலாவது நிகழ்வாக இது அமைந்தது.

## ஆபத்துமிக்கது

உயர் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திக்கொண்டு இவ்வாறு விமானிகள் இன்றி விமானத்தை செலுத்த முயற்சித்தாலும் இன்றும் இந்த செயற்பாடு ஆபத்து மிக்கதாகவே உள்ளது. தொழில்நுட்பம் தொடர்பில் அதிகபட்ச நம்பிக்கையை வைக்க முடியாமை இதற்குரிய பிரதான காரணமாகும்.

## FLY-BY-WIRE

இங்கு கேபளின் உதவியுடன் விமானத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியும், சிறகுகளும் இணைக்கப்பட்டுள்ளன. அதற்கேற்றவாறு உணர் கருவிகளும் கணினிகளும் நிறுவப்பட்டுள்ளன.





## Airbus A320

பிரான்சின் எயார்பஸ் நிறுவனத்தினால் 1987 இல் தயாரிக்கப்பட்ட எயார்பஸ் 320 பயணிகள் போக்குவரத்து விமானம் டிஜிட்டல் Digital Fly-by-wire தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திய முதலாவது பயணிகள் விமானமாகும். எதிர்வரும் காலங்களில் விமானிகள் இன்றி கட்டுப்படுத்த முயற்சிக்கப்படும் விமானமாக இவ்விமானம் கருதப்படுகின்றது.

## X-47B




அமெரிக்க விமானப்படையில் புதிதாக அறிமுகமாகியுள்ள X-47B விமானத்திலுள் விமானியின் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான கட்டுப்பாட்டுப் பணிகள் யுத்தக் கப்பலில் இருந்தோ அல்லது தரையில் உள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்தோ கட்டுப்படுத்தப்படுகின்றன.




இந்த X-47B விமானத்தின் சிறகினைத் தேவையான முறையில் விரிக்கவும் மடக்கவும் முடியும். (நீள அளவு அடிகளில் உள்ளது)

விமானியின்றி இந்த விமானத்தினை யுத்தக் கப்பலில் தரையிறக்க முடியும்.

## F-18 Aircraft

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட F-18 யுத்த விமானத்தினை நிறுத்தி வைக்கப்பட்டுள்ள யுத்தக் கப்பலின்மீது தரை இறக்க தானியங்கி தரை இறக்கி செயற்பாட்டு முறை (Automatic Landing Systems) நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தற்போது பல ஆண்டுகளாக அமுலில் உள்ள இந்த முறையினால் விமானிகள் பெரும் நன்மையடைந்துள்ளனர்.



## The Flying Test Bed

பிரித்தானியாவின் BAE Systems தொழில்நுட்ப நிறுவனத்தினால் Converted Jetstream aircraft என்கின்ற The Flying Test Bed ஜெட் விமானம், விமானிகள் இன்றி அந்நாட்டு விமான வலயப்பகுதியினுள் பரீட்சார்த்த ஓட்டங்களை நடாத்தி வருகின்றது. இந்த பரீட்சார்த்த ஓட்டங்கள் அனைத்தும் பயணிகளுடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. அவசர சந்தர்ப்பங்களில் உதவிவென விமானிகளும் அதில் பயணிக்கின்றனர்.



## Global Hawk

அமெரிக்க விமானப்படையின் ட்ரோன் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படும் Global Hawk விமானமும் விமானிகள் இன்றியே இயங்குகின்றன. இவற்றின் பிரதான கட்டுப்பாட்டு அறை பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது.

### விமானத்தினைக் கட்டுப்படுத்தல்

தரையில் உள்ள கட்டுப்பாட்டு அறை, விமானக் கட்டுப்பாட்டு அறை என்பன செய்மதியூடாக வழங்கப்படும் ஆணைகளினூடாக விமானம் இயங்கும்.




இவ்வாறான சிறியளவிலான மத்திய நிலையத்தில் இருந்துகொண்டு ட்ரோன் விமானத்தினை இயக்க முடியும்.



உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட வில் போஸ்ட் பயணத்திற்கு பயன்படுத்திய விமானத்துடன் இருக்கின்றார்.

## Autopilot System

தானியக்க விமானிகள் கட்டுப்பாட்டு முறை எனப்படும் Autopilot முறை நூறு ஆண்டுகளுக்கு முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் Sperry Gyroscope நிறுவனம் தானியக்க விமானி கட்டுப்பாட்டு தொகுதியையும் வானொலி அலைகளினூடாக திசைகளை அறியும் கருவியையும் உருவாக்கியது. இது முழுமையாகவே இயந்திரப் பொறிமுறை செயற்பாடாகும். 1933 ஜூலை மாதம் விமானத்தில் உலகம் முழுவதும் சஞ்சரித்த விலி போஸ்ட் முதன்முறையாக ஓட்டோ பைலட் முறையினைப் பயன்படுத்திய நபராகக் கருதப்படுகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1991




**17 ஆவது உலக சாரணர் ஜம்போரி - 1991**
**தென் கொரியா**

20,000 சாரணர்கள்



Soraksan National Park

135 நாடுகள்

ஒகஸ்ட் 08 - 16

தென் கொரியாவில் Mt. Soraksan National Park என்ற இடத்தில் *1991* இல் *17* ஆவது உலக சாரணர் ஜம்போரி நடைபெற்றது. 135 நாடுகளைச் சேர்ந்த







20,000 சாரணர்கள் இதில் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் உலகிலேயே அதிக உறுப்பு நாடுகள் பங்கேற்றன எனக் கூறலாம். 'Many Lands, One World' என்பது 17 ஆவது உலக சாரணர் ஜம்போரியின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. செக்கொஸ்லோவேகியா, ஹங்கேரி போன்ற நாடுகளிலிருந்து சாரணர்கள் முதன்முறையாகக் கலந்துகொண்டனர். மேலும், புதிதாக சாரண இயக்கம் ஆரம்பித்த பல்கேரியா, பைலோ, ரஷ்யா, எஸ்தோனியா, லத்வியா, லிதுவேனியா, போலந்து, ருமேனியா, உக்ரைன் மற்றும் யுகொஸ்லாவியா போன்ற நாடுகளில் இருந்தும் சாரணர்கள் கலந்துகொண்டமை சிறப்பம்சமாகும். இதில் முதன்முறையாக கிராம




முன்னேற்றம் பற்றிய நிகழ்வுகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

கொரிய நாட்டின் குடியரசுத் தலைவர் H.M.Roh Taw-Woo, ஸ்வீடன் நாட்டின் அரசர் மற்றும் மொராக்கோ நாட்டின் இளவரசர் H.R.H.Moulay Rachid போன்றவர்கள் கலந்துகொண்டு 17 ஆவது உலக சாரணர் ஜம்போரியினை சிறப்பித்தனர்.

### சாரணர் இயக்க உலக அமைப்பு WOSM (World Organization of the Scout Movement)

01 ஒகஸ்ட் 1907 இல் இங்கிலாந்தில் Brownsea தீவில் பேடன் பவல் அவர்களால் முதலாவது பரிசோதனை முகாம் நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேர்ந்த நாடுகளும் அங்கத்தவர்களது விபரங்களும்.

| நாடு | சாரணர் உறுப்பினர் | WOSM இல் சேர்ந்த ஆண்டு | நிறுவப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| பார்படொஸ் | 2,738 | 1969 | 1912 |

(தொடரும்)

தொகுப்பு: ஜனாதிபதி சாரணன் **யோ.கேதீசன்**
SLTS BP.A.WB(SL). IAP (India)

## அவதானிப்பு...!

சாரணர்கள் என்பவர்கள் அவதானிப்பு, கண்காணித்தல் போன்ற விடயங்களில் ஏனையோரைவிட முன்னிலையில் இருப்பவர்களாவர். சாரணர்களாகிய நீங்கள் எதனை எவ்வாறு கண்காணிக்க அல்லது அவதானிக்க வேண்டும்? என்ற கேள்வி எழுகிறது.

மனிதர்களையோ, மரம் செடிகொடிகளையோ, நீரோட்டங்களையோ மட்டுமல்ல; கடல், வானம் இந்த இரண்டும்கூட உங்கள் அவதானிப்பிற்கு உட்பட வேண்டியவையேயாகும். இதற்கமைய, அவதானித்தல் தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்கு வானத்தில் பறக்கின்ற பறவைகளை அவதானிப்பது மிகவும் பொருத்தமானதாகும். இது மிகவும் விநோதமானதாகவும் இருக்கும். தொலைதூர வானில் பறக்கின்ற பறவைகள், தரையில் இருக்கின்ற சாரணனுக்கு கருமை நிறத்திலான வெவ்வேறு விதமான உருவ வடிவங்களை உணர்த்துவதுடன், அவற்றை ரசனையுடனும் காணமுடியும். பறவைகளின் உருவ வடிவங்கள் வித்தியாசமானதாகும். எனவே, அவற்றை அவதானித்தல், ரசித்தல் ஆகியன சாரணனுக்குள் ஆழமான ஓர் அவதானிப்புத் திறனை, பக்குவத்தை ஏற்படுத்தும்.





இங்குள்ள படங்கள் தூரத்தே பறக்கும் பலவித பறவைகளின் வடிவங்களை அவதானித்து, அவற்றின் தோற்றங்களை ஒத்ததாக வரையப்பட்ட ஓவியங்களாகும்.

## சாரணியம் என்பது...

சாரணியம் என்பது என்ன என்று யாரேனும் கேட்டால் அதற்கு உங்களது பதில் என்னவாக இருக்கும்?


சாரணியம் என்பது வெளிக்கள தொழிற்பாடுகளில் ஈடுபடக்கூடிய இயற்கை சுற்றுச்சூழலை நேசிக்கக்கூடிய சமூகமொன்றை உருவாக்குதல் மற்றும் அணிசேர்ந்து பணிகளில் ஈடுபடக்கூடிய கூட்டுணர்வை உணர்த்துதல், எப்போதும் வயதில் மூத்த, சேவையில் மூத்தவர்களின் கருத்துக்களை செவிமடுத்தல், தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காண்பதற்கான தன்னம்பிக்கை உணர்வை மேம்படுத்தல் மற்றும் மற்றவர்களுக்கு சேவைபுரியும் மனித நேயத்தைக் கொண்டிருத்தல் என்பதே சாரணியம் என்பதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக ஆழத்தில் இடம்பெற்ற பாரிய பூமியதிர்ச்சி




இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள அறிக்கைகளின்படி, மிகவும் ஆழமான பகுதியில் ஏற்பட்ட மிகப்பாரிய பூமியதிர்ச்சி கடந்த மே மாதம் 24 ஆம் திகதியன்று ஏற்பட்டது. இது தொடர்பான முழுமையான விபர அறிக்கை சில தினங்களுக்கு முன்னரே வெளியாகியது. மேற்கு பசுபிக் சமுத்திரத்தை அண்டியதான ரஷ்யாவின் 'ஒக்ஹோட்ஸ்க்' ஆழ்கடல் பகுதியில் ஏற்பட்ட இந்த பூமியதிர்ச்சியானது, 8.3 ரிச்டர் அளவைக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது நிலப் பகுதியின் 609 கிலோ மீற்றர் ஆழப் பகுதியில் ஏற்பட்டிருந்தது. இந்த பாரிய பூமியதிர்ச்சி தொடர்பான ஆய்வுகளை அமெரிக்காவின் கெலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மேற்கொண்டுள்ளனர்.



இதற்கு முன்னர் 1994 ஆம் ஆண்டில் இதுபோன்ற பூமியதிர்ச்சியொன்று பொலிவியாவில் ஏற்பட்டிருந்தது. மேற்பரப்பில் இருந்து 637 கிலோமீற்றர் ஆழ்பகுதியில் குறித்த பூமியதிர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆனால், கடந்த மே மாதம் நடைபெற்றுள்ள அண்மைய பூமியதிர்ச்சியானது, 1994 இல் பொலிவியாவில் இடம்பெற்ற பூமியதிர்ச்சியைவிட, மூன்று மடங்கு பாரியதாக இருந்ததாக புவியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அதிலும் 35 மெகா தொன் டி.என்.டி வெடிமருந்தின் வலுவிற்கு இப்பூமியதிர்ச்சி சமமானதாக இருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், இத்தகைய பாரிய பூமியதிர்ச்சியானது, எவ்வாறு ஏற்பட்டது என்பதற்கான இறுதித் தீர்மானத்திற்கு இன்னமும் வரமுடியாமல் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## ஞாபகசக்தியை அதிகரிக்க பழச்சாறு அருந்துங்கள்

பழச்சாறு (Fruit Juice) பருகுவது ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யும் என்று பிரிட்டனில் நடைபெற்ற ஆராய்ச்சியொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.பழங்களை உணவாக உட்கொள்வதால் ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யத்தக்க ரசாயனத்தை உருவாக்குவதற்கான உத்வேகத்தை வழங்குவதாக இந்த ஆராய்ச்சிகளின்மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, ஞாபக மறதி நோய் என்று கருதப்படும் 'எல்ஸைமர்' என்ற நோயாளிகளிடத்தில் இதனைப் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கில் அவர்களுக்கு பழச்சாறு வழங்கப்பட்டது. இதுவொரு மருந்தாக இல்லாதபோதிலும், மறதி நோயினை அதிகரிக்கச்செய்யவிடாமல் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்படி பழச்சாறு ஏதுவாக இருந்துள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஆக! பரீட்சைக்குச் செல்லுமுன் ஒரு 'கப்' பழச்சாற்றை பருகிச் சென்றால் 'பாஸ்' மார்க் உறுதி...




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 23, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org